# இராமபாணம்

இளைய சமுதாயத்தினருக்கான
கட்டுரைத்தொகுதி



## நினைவு ஏடு

அமரர் திரு. வே. இராமலிங்கம்
அவர்களின்
பத்தாவது ஆண்டு நினைவாஞ்சலி
27-10-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவு ஏடு

## அமரர் திரு. வே. இராமலிங்கம்

அவர்களின்

## பத்தாவது ஆண்டு நினைவாஞ்சலி

27-10-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயிலிலே.......

வணக்கம்!

எங்கள் குடும்பத்தலைவன் அமரர் திரு.வே. இராமலிங்கம் அவர்கள் மறைந்து பத்து ஆண்டுகள் ஆயின. அவர் பிறந்து 74 வயது முடிந்து இது 75 வது பிறந்தநாள் ஆகும். அமரர் தம் நினைவும் விட்டுச்சென்ற உயிர்களின் தவிப்பும் இன்று எவ்வாறு உள்ளது? சமுதாயத்துக்கு பயன்தர ஏது நடந்தது?

ஒரு பிதுருக்கு பத்துவருட காலம் தொடர்ந்து திவசம் கொடுக்க வேண்டும் என்பர். எள்ளும் தண்ணீரும் இறைத்து கிரியை செய்து சுற்றஞ் சூழ அவரை நினைத்திருந்தோம். இனியும் தொடரவே செய்வோம். அவருடைய நினைவாக இந்த சிறுநூலை வெளியிட்டுள்ளோம். இதுவரை யாழ்ப்பாணத்து ஆச்சிரமம் ஒன்றக்கு உதவி செய்து வந்துள்ளோம்.

நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் 1990 - 91 இல் கொழும்பில் இந்த இழப்பு நேரிட்டது. ஏற்கனவே பல இழப்புகளால் மன்தளர்ந்திருந்த இக்குடும்பம் தம்மன உணர்வுகளைக்கூட வெளிப்படுத்த முடியாத அளவுக்கு மன அழுத்தங்களால் தளர்ந்துபோய் இருந்தது. குடும்ப அங்கத்தவர் இருவர் அங்கே பிரசன்னமாயிருக்கவில்லை. அவரின் குலதெய்வமாகிய நல்லூர்க் கந்தசுவாமியாரையும் காங்கேசன் துறையை வாழ்விடமாகக்கொண்டபோது இறங்கணியவளை சிவகுருநாத சுவாமியையும் மாவிட்டபுரம் கந்தசுவாமியாரையும் வழிபாட்டுத் தெய்வங்களாக வணங்கிவந்தவர். பகவான் சத்யசாயிபாபாவில் ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்டவர். எனவே முருகப் பெருமான் பற்றிய பலபாடல்களையும் கட்டுரைகளையும் தொகுத்து "குகநெறிக்கோவை" என ஒரு அஞ்சலிநூலை அந்தியேட்டிக்கு வெளியிட்டோம்.

அவர் அமரராகி 10 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. அவர் பிறந்து இன்று எழுபத்திநான்கு வயது முடிந்து 75வது பிறந்தநாள். பெரும்மகான்களுக்குத்தான் பிறந்த நாளைக் கொண்டாடுவார்கள். எம்மைப் பொறுத்தவரை இவரும் எமக்கு ஒருமகான்தான். எனவே பிறந்தநாளை ஒட்டி இக்கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குபடுத்தப்பட்டது.

தற்காலத்துக்கு ஏற்றதாக ஒரு கட்டுரைத் தொகுப்பு விடலாமோ எனத் தோன்றிற்று. திரு. **பரோபன்** ஆசிரியராகக் கொண்டு மாணவர் பத்திரிகையாக மலர்ந்த சுடரொளியில் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள் எழுதிய சில கட்டுரைகளையும் தமிழர் கூட்டுறவு இல்லத்தின் வெளியீடான "துருவ தாரகை" யில் அவரே எழுதிய சில கட்டுரைகளையும் எடுத்துத் தொகுத்து "இராமபாணம்" எனப் பெயர்சூட்டியுள்ளோம்

இராமனின் அம்பு ஏழு மரங்களையும் ஊடுருவிச் செல்லுமாம். துளைக்கிற ஒரு பூச்சிக்கும் இராமபாணம் என்பது பெயராம். ஆனால் மூன்றாவதாக இன்னமும் ஒரு கதையுண்டு. இது ஒரு மூலிகை மருந்து. ஆயுர்வேத வைத்தியர்களால் செய்யப்படுவது. ஒரு மண்டலம் சாப்பிட வேண்டுமாம். கடும் பத்தியம். இது உடலிலே உள்ள கொழுப்பு போன்ற அழுக்கு துர்நீர் என்பவற்றை நீக்கி உடம்பை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

இந்த இராமபாணம் உள்ளத்து அழுக்குகளில் ஒருசிலதையாகிலும் நீக்கி பயனைத் தரும் எனக் கருதி இச்சிறு நூலை நினைவு மலராக வெளியிட்டு எங்கள் குடும்பத் தலைவருக்குக் காணிக்கையாக்கி உங்கள் கரங்களில் தவழ விடுகின்றோம்.

நன்றி

சசிகலா செந்திலால் குடும்பம்
கலாவாணி பாலச்சந்திரன் குடும்பம்
துளசிராம் மஞ்சுளா குடும்பம்
வள்ளிநாயகி இராமலிங்கம்

"கற்க; கசடு அறக்கற்க கற்றபின்
நிற்க அதற்குத்தக".

- வள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவி ராஜா அனுபவி

'உடலினை உறுதி செய்' எனப்புதிய ஆத்திசூடி பாடினார் பாரதியார். ஔவையாரும் கம்பருமே தன்னால் முதன்மையாக வைத்து எண்ணப்படுபவர்கள் எனக் கூறும் பாரதி. ஔவையின் அடியொற்றிக் காலத்துக்கேற்ற வகையில் புதிய ஆத்திசூடி பாடியதில் வியப்பொன்றில்லை.

ஔவை உலக வாழ்க்கைக்கும், ஆன்மீக வாழ்க்கைக்கும் வழிகாட்டி. "உடையது விளம்பேல்" என்றார். தமது உடமைகள், திட்டங்கள், செயற் பாடுகள் பற்றி எவருக்கும் கூறாதே எனச் சிலரின் இயல்புகளை எடுத்துக் காட்டினார் ஔவை. மக்களின் அரிய பெரிய பொக்கிஷங்கள் களவு போகக்கூடும்; அவரது பேணப்பட வேண்டிய இரகசியங்கள் அலர் தூற்றப்படலாம்; தனது திட்டங்களைத் தாமே நிறைவேற்ற முயலுமுன் அதனை அறிந்தோர் முந்திக்கொண்டு செயற்படக்கூடும்; என்பன ஔவையின் விளக்கம் ஆகலாம். அத்துடன் தன்னடக்கப் பயிற்சியும் ஆகலாம்.

ஔவை வாழ்ந்த காலத்து மக்கள் சுகதேகிகளாகப் பலசாலிகளாக நோய் நொடியின்றி, இயற்கையோடு ஒட்டிய வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். "நோய்க்கு இடங்கொடேல்" என்கிறது ஆத்திசூடி. ஆனால் பாரதி காலத்து மக்கள் செயற்கை வாழ்வுக்கு அடிமைப்படத் தொடங்கிவிட்டார்கள். "நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி" நடையுடைபாவனைகளை மாற்றி உடலுழைப்புக்கு விடுதலை கொடுக்கத் தொடங்கிவிட்டனர். எனவே அவன் "உடலினை உறுதிசெய்" என்றான். ஏறுபோல தலைநிமிர்ந்து நட என்றான்.

சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்! எதற்கும் ஆதாரமாயிருக்கின்ற இவ்வுடம்பை ஆரோக்கியமாக வைத்திரு, உறுதியாக்கு; அதற்குத் தேவையான அளவான ஊட்டச்சத்துள்ள உணவை உண். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. எனவே அளவோடு உண்; நோய் நெருங்காது பாதுகாத்துக் கொள்; தேகப்பியாசம் செய், உடலுக்கும் உள்ளத்துக்கும் மகிழ்ச்சியளிக்கும் விளையாட்டுக்களில் கருத்தாயிரு. இவை மூலம் உடலை உறுதியாக்கு என நிறைந்த கருத்துக்களைக் குறைந்த சொற்களுள் புகுத்தி விட்டான் என்றும் சாகாத - வையத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை பெற்ற கவிஞன் பாரதி.

உடலை ஓம்பி வளர்த்தல் ஒவ்வொருவரின் கடமையாகும் என வேறொரு கண்ணோட்டத்தில் காண்கிறார் திருமூலர். இளமை நிலையாமை. யாக்கை நிலையாமை என மற்ற மதத்தவர்கள் பேசிக் கொண்டிருக்கத் திருமூலத்தவமுனி உடம்பைப் பேணுவதன் அவசியம் பற்றி இப்படிக் கூறுகிறார்.

**உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்**
**உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்(று)**
**உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.**

**– திருமூலர்**

இறைவனை வழிபடுவதற்காக அமைந்த இந்த உடம்பினைப் பாதுகாத்து வளர்த்தாலே உயிரும் நிலைபெற்றிருக்கும். உயிர் இருந்தால் தானே உள்ளத்தினுள்ளே இருக்கும் செம்பொருளை நாம் அறிய முடியும். உணரமுடியும். அஃதாகவே நாம் மாற முடியும் என்கின்றது திருமந்திரம்.

நிதர்சனமாக நாம் நோக்கும்போது நமது வாழ்க்கை நெறி என்ன? இளைஞர்களே! இலங்கைவாழ் தமிழரின் வாழ்க்கை சிறிது காலமாகப் போட்டி, பொறாமை முதலியவற்றால் கட்டியெழுப்பப்பட்டதாகத் தெரிகிறது. “தக்கது வாழும்” எனும் கோட்பாட்டுப்படி எமது வாழ்க்கை போட்டியும் பூசலுமாக மாறத் தொடங்கியது எப்போது? எதிலுமே வஞ்சிக்கப்படும்போது இவை கால்கோள் கொள்கின்றன. குடிசனம் பெருகப் பெருக - பூமிதிருத்தியுண்ணும் தொழில் நுட்பங்கள் கிடையாது போக - நாட்டின் வரட்சி மனிதனின் முயற்சியை அளவுக்கு அதிகமாக்க - உத்தியோகம் பெறுவதற்கு கல்வி பெறும் மோகம் அதிகரித்தது. உயர் உத்தியோகத்துக்கான போட்டி கல்வியிலும் ஏற்படலாயிற்று. இதற்கு மகுடம் வைத்தாற்போலத் “தரப்படுத்தலும்” வந்து சேர்ந்தது.

பெற்றோருக்குள் - மாணவர்களுக்குள் போட்டி பொறாமை, சச்சரவு, பல்கலைக்கழகம் புகுதலே இலட்சியம் ஆகி விளையாட்டுக்களை மறந்தார்கள். உணவை மறந்தார்கள். அதிகாலை ரியூசன், இரவு ரியூசன், சைக்கிள் தடியில் பறப்பார்கள். தெரிவு ஆகவில்லையானால் விரக்தியின் எல்லை தற்கொலை, பழிவாங்கல் என இறங்கி விடுவார்கள். கல்வியின் மோகம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெறி - பரீட்சையில் சித்தியடைதல். இது சரியா?

1987இல் தமிழ்ப் பகுதியெல்லாம் பரவலான குண்டுவீச்சு. பெற்றோல் குண்டு, ஆர்ட்டிலறி ஷெல், 50 ஹலிபர் துவக்கு வெடி. கண்மண் தெரியாத - திக்குத்திசையறியாத ஷெல்லடி (முகாம்களிலிருந்து) ஐந்து, ஆறு மணிக்கே உணவை முடித்துப் பதுங்கிவிடும் மக்கள். உணவில்லை. கடைகள் பூட்டு, மரணபீதி, இந்நிலையிலுங்கூட எம்மாணவர்கள் லாம்பைக் கொளுத்திவைத்து பங்கர்களுக்கு உள்ளேயிருந்து படித்தார்கள். அதே பழக்கத்தில், பங்கர்களே நிம்மதியான இடம் எனப் பகலிலும்கூட அந்த இட்டுமுட்டான புதிய காற்றில்லாத அந்த இடமே அவர்கள் தஞ்சமாயின. படிப்புக் களமாயின. இந்த நிலையே பரவலான குண்டுவீச்சில் 15வருடங்களாக நடைபெற்றுவருகிறது. அத்தகையதொரு பெருமுக்கியம் கல்விக்குக் கொடுக்கப்பட்டது. கனடாவிலும் பிரத்தியேகப்படிப்பு முக்கியத்துவம் பெற்றுவருகிறது. அங்கே கற்பித்த அதே ஆசிரியர்கள் இங்கேயும் வந்துவிட்டார்கள். வீட்டு ஹால்களிலும், கறாச்சுகளும் ரியூசன் நிலையங்கள் ஆகின்றன. மாணவர்களின் ஓய்வுப்பொழுது அங்கேதான்.

பெற்றோருக்கும் பழைய மனோநிலை. பிள்ளைகளுக்கும் அம்மனப்பான்மை வளர்க்கப்படுகிறது. அறிவுவளர்ச்சிக்கு முதன்மை கொடுக்கும் பெற்றோர், உடல் வளர்ச்சியைச் சிறிதாவது நினைக்கிறார்களா? அங்கே நெருக்கடியும் பதகளிப்பும் நிறைந்த வாழ்க்கைக்காக எல்லாம் துறந்து கல்விக்கு மட்டுமே இடங்கொடுத்தோம். உலகின் அதிஉன்னத முதலாந்தர நகரம் ஒன்றுக்கு வந்து விட்டோம். இங்கேயும் நமது இளமையை இப்படியே போக்க வேண்டுமா? உலக இன்பங்களையும் வசதி வாய்ப்புகளையும் நமக்கு வளமாக்கியும் வசமாக்கியும் அனுபவிக்க வேண்டாமா?

அறிவு பெறுதல் அத்தியாவசியம் தான். அதிலும் ஆங்கில அறிவு பெறுவதற்குச் சிறிது பிரத்தியேக படிப்புத் தேவைதான். ஆனால் அது புத்தகப்பூச்சியாக மாறுவதால் மட்டும் சாத்தியமாகாது. உலக அனுபவக் கல்வியும் ஒன்று உள்ளது. எனவே நமது நேரத்தைக் கல்விக்கு, கலைகளுக்கு, தேகப்பயிற்சிகள், விளையாட்டுக்கள், நாடகக் களப்பயிற்சிகள், சங்கீதம், நடனம், ஓவியம் எனப் பல்கலை வல்லுநராக வரத்தக்கதாக பகிர வேண்டும்.

நமது கரண்டியால் தீத்தும் கல்விமுறை இவ்விடக் கல்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைக்கு முரணானது. கல்விக் களங்கள் மாணவரின் சுயசிந்தனைகளை வளர்ப்பதற்கான வழிவகைகளைக் கொண்டுள்ளன. அதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் வரைபு, கவர்ச்சியான வகுப்பறைச் சூழல், மாணவரைச் செயற்படவைத்தல், உபகரணங்களைக் கையாளவிடுதல், போன்ற பல உத்தி முறைகளைக் கொண்டுள்ளன. மூளைச்சலவை எனும்சொல்லை அதிகமாகப் பிரயோகிக்கும் நாமோ மாணவரின் சிந்தனையைத் தடைசெய்வதோடு உடலுக்கான பயிற்சியையும் கொடுக்க மறுக்கிறோம்.

இளைஞர்களே! ஆரோக்கியமான, மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றைப் பெறவும், பேணவும் அந்தந்தப் புலன்விழிநுகர்ச்சிகளான தொடுதல், பேசுதல் அல்லது சுவைத்தல், பார்த்தல், மணத்தல், கேட்டல் ஆகியவற்றைக் கூர்மையடைய வைத்தலும் மன உளைவுகளைத் தடுத்தலும் மிக அவசியம். அதனால் எமது நேரத்தைச் சமமாகப் பகிர்ந்து சகல துறைகளிலும் முன்னேற வேண்டும். அப்போதுதான் சமமான உடல்நலத்தையும் சமமான உளநலத்தையும் பெற்று உல்லாசமான இளமையைச் சரியான முறையில் பயன்படுத்த முடியும். ஹொக்கி, பேஸ்போல், பனிச்சறுக்கு முதலிய விளையாட்டுத் துறைகளிலும் பல்வேறு வகையான நாடக, சங்கீத நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள முயலுங்கள்.

அனுபவி ராஜா அனுபி
அமையும் பண்புடன் அனுபவி
அல்லலைத் தேடி வருந்தாமல்
ஆரோக்கிய வழியில் அனுபவி

நன்றி சுடரொளி: 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிபோதை குடும்பத்தை அழிக்காதா?

"மது அருந்துதல் பாவம்" எனக் கனல்கக்கக் கூறியவர்கள் நம் முன்னோர்கள். பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாகக் கள்ளுக் குடித்தலும் கருதப்பட்டு வந்தது. ஒரு செம்மையான சமுதாயத்தில் எல்லாம் அளவோடு இருத்தல் வேண்டும் எனும் தத்துவம் நிலவியது அக்காலம். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்" என்பது தமிழில் விளங்கும் பழமொழி.

தென்னை, பனை, கித்துள் போன்ற கிளையற்ற தாவரங்களில் இருந்து இறக்கப்படும் சாறுகள் உடலுக்கு வளத்தையும் வனப்பையும் கொடுக்கும் என்பதை நம்முன்னோர்கள் அறிந்திருந்தனர். அவை புத்தம் புதிதாக புளிப்புத்தன்மை அதிகரிக்க முன்னரே அளவாக அருந்துதல் உடலுக்கு நல்லதாக இருக்கலாம். சங்கத்தமிழ் இலக்கியங்களில்கூட சாறு அருந்துதல் அல்லது மது அருந்துதல் பற்றிய ரசமான காட்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன.

தலைவியும் தோழியருங்கூட புத்தம் புதிய கள்ளினைப் பன்னாடையில் வடித்துத் தம் கூரிய நகங்களினால் வண்டு தெறித்து அருந்துங் காட்சி "மூவருலா" போன்ற நூல்களில் காணப்படுகின்றன. குரங்குகளும் புளித்த கள்ளினைக் குடித்து வெறி கொண்டாடின எனவும் நகைச்சுவை பல காணப்படுகின்றன. சங்கத்தமிழ் நூல்கள் கூறுவன எல்லாம் எம்மாலும் எப்போதும் செய்ய முடியும் என இங்கே கூறப்படவில்லை. உல்லாசமாக இருக்கும் வேளைகளில் ஏதோ சிறு மது அருந்துகிறார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

சாதாரணமாக அவன் ஒரு குடியன் என்று கூறினால், தேநீர்க்குடியன், கோப்பிக்குடியன், மோர்க்குடியன் என நாம் அர்த்தங் கொள்வதில்லை. மதுவையும் அதனை அளவுக்கு மீறிக் குடிபப்வனையே குடியன் என்கிறோம். ஒரு பெண்ணுடன் வாழ்பவனை யாரும் கூத்தியன் என்று சொல்வதில்லை. அவர் நற்குணம் படைத்தவர் எனின் வாழ்வின் ஒரு சிறு பொழுதிலாயினும் அவர்தவறிழைக்காமல் வாழ்ந்தார் என்பதற்கில்லை. சிறந்த பாடகன் எனின் ஒரு தடவையாவது சுருதி, லயம், தாளம் தப்பாமல் பாடுகிறவர் என்பது கருத்தல்ல. எனவே மக்களின் அளவுக்கு மீறிய சில செயல்களாலேயே அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கமும் உணர்வும் அழிதற்கான சில பாவங்கள் பிற பெண்களிடம் செல்லுதல், மது அருந்துதல், சூதாடல் என்பன ஆகும். உலகத்தில் மனிதராக வாழ விரும்புவோர் இவற்றை ஒழிக்க வேண்டும்.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திரு நீக்கப் பட்டார் தொடர்பு"

என வள்ளுவனும் இத்தகையோர் திரு என்னும் அடைமொழியால் அழைக்கப்படாதவர் எனக் கூறினார். கல்வியறிவு குடிப்பிறப்பு முதலியன மற்றப்பாவங்களையும் பாதகங்களையும் செய்யவிடா. ஆனால் முடிகொண்ட மன்னர் தொடக்கம் முற்றுந் துறந்த முனிவர் வரை உணர்வுகள் அழிக்கப்பட்டு இத்தகைய ஒழுக்கம் தவறுதலை நூல்கள் வாயிலாகவும் நேரடியாகவும் காண்கிறோம். சிவபக்தனாக இருந்தும் பிறன்மனைவியை கவர்ந்த இராவணன், சூதாடி நாடிழந்த நளன் போன்றோர் கண்முன்நிற்கிறார்கள்.

பழையகள்ளின் வெறி பாரதியாராலும் பாடப்பட்டுள்ளது. வள்ளுவன், "எந்நேரமும் கள்ளின் மேல் காதல்கொண்டு திரிவோன். எத்தகைய வீரனாயிருந்தாலுங்கூடப் பகைவர் அஞ்சமாட்டார்கள். ஒரு போத்தல் மதுவோடு ஆளைவிழுத்துவார்கள். அவன் தன் முன்னோராலும், தன் கல்வி செல்வத்தாலும் பெற்ற பேர், புகழ் என்ற ஒளியையும் இழப்பான்" என்கிறார். மேலும் கள்ளுண்பவர் நஞ்சுபவருக்குச் சமமாவார் எனும் பொருளின்படி
"எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என வள்ளுவம் கூறுகிறது. வள்ளுவம் தந்த வாழ்க்கை நெறிகள் 133 அதிகாரங்களில் கள்ளுண்ணாமை ஒரு அதிகாரம் என்பதை நாம் அதி கவனத்துக்கு எடுத்துக் கொள்வோம்.

"கள்" நாம் உண்பதில்லையே என விதண்டாவாதம் பேசலாம். செயற்கையாகச் செய்யப்பட்ட மது மேலும் மோசமானது. தத்துவங்களிலிருந்து நிதர்சனத்துக்கு வருவோம். முன்பு அரைப்போத்தல் கள்ளுக்கும் வழியற்றவர்கள், மது அருந்துதல் தீமை எனக் கருதியவர்கள்; மது அருந்தினால் சமூகம் தம்மை மதியாது என நினைத்தவர்கள்; மது அருந்துதல் வீண்செலவு எனத் தவிர்த்தவர்கள், மது அருந்தி வெறியாடி, மனைவிக்கு மொத்து மொத்தெனக் குத்திக் கால்பந்து ஆடியவர்கள் பாத்திரம் பண்டங்களைப் போட்டுடைத்தவர் எனப் பலவகையினர் கனடா வாழ்க்கையில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இங்கே முதன்முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றிய நாகரீகம் மது அருந்துதல்தான். அதன்பின்தான் உடைமாற்றம், மொழிமாற்றம் நிகழ்கிறது.

குளிர்நாடாம்! குடிக்காது இருக்க முடியாதாம். விருந்துகள் கேளிக்கைகளில் குடிக்காவிட்டால் வெள்ளைக்காரன் மதிக்கானாம் இத்தகைய உயர்வகைக் குடிவகைகள் ஊரில் கிடைப்பதில்லையாம்; பிரிந்து வந்த உலகினை - உயிர்களை - மறக்க நல்ல மருந்தாம்; விலையும் நிரம்ப மலிவுதானாம். எல்லாவற்றிற்கும் மேலாக, பணம் தாராளமாகப் புழங்குகிறதாம். அதீத குடிகாரரிடம் பெற்றுக்கொண்ட தகவல்கள் இவை.

பொதுநலப் பணத்தைப் பெறுபவர்களிடையேதான் மோசமான குடியைக் காணக்கூடியதாக இருக்கிறது. தான் உடம்பாலோ மூளையாலோ சம்பாதிக்காத பணம் அல்லவா! அதன் அருமை அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது? யாரோ ஒருவரின் கடின உழைப்பினால் பெற்ற வரிப்பணம் இப்படி வீண்விரயம் ஆக்கப்படும்போது, நம்மனச்சாட்சி எங்கே போகிறது? இப்பணத்தின் உதவியால் தாமும் படித்து மனைவி பிள்ளைகளையும் வேண்டிய அளவு படிப்பிக்கலாமே. அல்லது தேவையானவர்களுக்குக் கொடுக்கலாமே. பொறுப்பற்ற முறையில் சிலர் நடந்து கொள்கிறார்களே.

ஊரிலே ஓரளவு மதிப்பு மரியாதையுடன் வாழ்ந்தவர்கள்கூட இங்கே மாறித்தான் போய்விட்டார்கள். பெண்கள் வன்முறைச் சம்பவங்களில் அநேகமானவை குடியினால் நேர்ந்தவையே. தன் அறிவையே அழிக்கும் குடியினால் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் மனைவி பிள்ளைகள் மனதைப் புண்படுத்துகிறார்கள். தடியடியில் இறங்குகிறார்கள். தற்கொலைக்கு இட்டுச் செல்கிறார்கள். குடும்ப இரகசியங்கள் வெளியே போகவழிவகுக்கிறார்கள். மூன்றாம் ஆளின் தலையீட்டைப் புகச்செய்கிறார்கள்.

மனோவிசாரங்கள் அழுத்தங்கள் புலம்பெயர்ந்த எல்லோருக்குமே யுண்டு. அதற்காகத் தம் மனைவியரையும் குழந்தைகளையும் துன்புறுத்துவோர் மனிதர்களா? விலங்குகளா? எவ்வளவு காலத்துக்குத்தான் மானம் மரியாதை காப்பாற்றவும், பாரம்பரியம் பண்பாடு பேணவும், தங்களால் குடும்பம் குலைந்து விட்டது எனும் அவப்பெயர் எடுக்காமல் இருக்கவும் வேண்டுமெனப் பெண்ணால் சகிக்க முடியும். தமக்கும் பிள்ளைகளுக்கும் உயிராபத்து வரக்கூடியநிலையில் குடிகாரன் ஒருவனுக்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் உயிரை அர்ப்பணிக்காது, அரசாங்கம் அளிக்கும் வசதிகளைப் பயன்படுத்தி விலகிச் செல்ல பெண்களால் முடியும். இதனால் குடும்பம் குலைகிறது, பிள்ளைகள் தந்தையில்லா வளர்ப்பில் சேருவர். பிற்காலத்தில் தத்தம் குடும்பங்களையும் அபப்டியே அமைத்துக் கொள்ளும் இயல்பு அவர்களுக்கும் தோன்றிவிடும். எனவே குடும்ப வன்முறைகள் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கும் குடிபோதை அழிய வேண்டும் மாணவர்களே! இளைஞர்களே! புதிய சூழ்நிலையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் உங்கள் பழைய தலைமுறைக்குப் புத்திபுகட்ட வேண்டியது நீங்களே.

நீங்களும் எங்கே அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்து அதற்கு ஆளாகி விடுவீர்களோ எனப் பயமாக இருக்கிறது. இல்லை யில்லை! மேல்நாட்டுக்கு, வளைந்து கொடுக்கும் சிறுவயதிலேயே வந்துவிட்டீர்கள். பாடசாலையில் ஒழுக்கங்களையும் ஒழுங்கு களையும் கற்றுக்கொணடு அநுசரணையாக வாழப் பழகியிருக் கிறீர்கள். கண்டதையும் கண்டு தடுமாறாது பல்லினச் சமுதாயத்தில் நன்கு கற்று வருகிறீர்கள்.

பாதகம் செய்பவரைக் கண்டால்
பயங் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா

எனக் குழந்தைகளை நோக்கிப் பாடுகிறார் பாரதியார். நீங்கள் பாப்பாக்களிலும் மேலாக வளர்ந்த குழந்தைகள். அளவுக்கு மிஞ்சிக் குடித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவது உங்கள் வீடுகளில், அயல்களில் நிகழ்ந்தால் "பட்டும் பாரேன் பருத்தியும் பாரேன்" என்ற பழமொழி மாதிரி அவர்கள் அப்பர், தாத்தா, மாமா, மச்சான் எனக் கண்மூடி இராதீர்கள்.

பொங்கி எழுங்கள்! போத்தல்களைப் போர்த் தேங்காய் ஆக்குங்கள். குடிபோதையில் ஆட்டம் போடுபவருக்கு வெறியை முறியுங்கள்! பிரஹலாதன் தந்தைக்கு பாடம் கற்பித்தது போல நீங்களே நரசிம்ம அவதாரம் எடுங்கள். கேட்காவிட்டால் பொலிஸாரின் உதவியையும் நாடுங்கள்.

என்ன கட்டுரையாளர் பெரியோரை அவமதிக்கச் சொல்கிறாரா? இல்லை இல்லை வள்ளுவர் கூறுகிறார் "உண்ணற்க கள்ளை" உணில் உண்க சான்றோரால் எண்ணப்பட வேண்டாதார். ஆம் நீங்கள் சான்றோராக வாழ விரும்பின் குடிவெறியில் வன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிப்போரை அவமதித்தலும் தகும்.
காரோடும் போதும் குடிபோதையா என அவதானிக்கும் கனடாவிலா குடும்பத்தை ஓட்டும்போது போதையில் நடக்கும் வன்முறைக்கு அனுமதி கிடைக்கும்?.....

இளைஞர்களே! மாணவர்களே! கண்ட பாவனையில் கொண்டை முடிக்கும் உங்கள் முதியவர்களைக் காப்பாற்றுங்கள். போதையால் குடும்பம் எனும் மரத்தின் வேர்கள் அறுந்து போகாது பார்த்துக் கொள்ளுங்கள்.

நன்றி, சுடரொளி 1995

## குடும்ப வன்முறையாளர் பற்றி ஔவையார்

ஆண்: அற்றதலை போக அறாத தலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ - வற்றல்
மரமனையானுக்கு இம்மானை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்.

பெண்: சண்டாளி சூர்ப்பனகை தாடகை போல்வடிவு
கொண்டாளைப் பெண்ணென்று கொண்டாயோ
செருப்படி தான் செல்லா உன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் மேல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் இங்கே உண்டாயின் கவலையில்லை

பாரதியின் காதற் கனி சொட்டும் பாடல்கள் பல கற்பனையில் விரிந்து நம்மையொரு உல்லாசபுரத்திற்கு அழைத்துச் செல்வன. "காதல் போயிற் சாதல்" எனும் கடின முடிவையும் தருவன.

காதல் புனிதமானது: பவித்திரமானது: தெய்வீகமானது: இது உளத்தைச் சார்ந்தது. இல்லை இல்லை உளத்தையும் உடலையும் சார்ந்தது. இப்படியெல்லாம் இலக்கியங்களும் தத்துவங்களும் காதலை வருணிக்கின்றன. காதல் என்பது தோல் வரையில் தான் ஆழமுள்ளது. இது குருட்டுத்தனமானது: உடல் இச்சைதான் காதல் அது கல்யாணம் வரைதான் என்போரும் உண்டு.

கணவன் மனைவியாக விரும்புவோர் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் ஆராத வேட்கை தான் காதல். ஒருவரை ஒருவர் கண்டு விதிவசத்தால் இருவரும் இதயம் மாறிப் புகுந்து, பார்க்கும் இடமெல்லாம் மற்றவர் உருவமே நீக்கமற நிறைந்து "அடைந்தால் அவரையே - அவளையே அடைவேன் அன்றேல் உயிரை விடுவேன்" எனும் உயர்நிலையில் உறுதி பெற்ற காதல், கணவன் மனைவியாகி குழந்தைகள் பெற்று பெருவாழ்வு பெற்றுஇறக்கும் வரை நின்று நிலைக்கும்.

காலம் காலமாக இக்காதல் படுத்திய பாட்டில் இலக்கியங்களும் சரித்திரங்களும் பல காதல் ஜோடிகளை நமக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கின்றன. காதல் சாம்ராஜ்யத்தை வெல்வதற்காக, தமது அரச பதவிகளையே துறந்திருக்கின்றனர் சிலர். ரோமியோ - ஜூலியற், அம்பிகாவதி - அமராவதி, அனார்கலி - சலீம், ஷாயகான் - மும்தாஜ் எனக் காதலர் பட்டியல் நீண்டு கொண்டே போகும். காதலுக்காக அவர்கள் பட்ட கஷ்டங்கள், தியாகங்கள், சோக முடிவுகள் நம் உள்ளத்தைச் சாறு பிழியும். காலங்கள் மாறுகின்றன. வாழ்வு இயந்திர மயமாகி வருகின்றது. அதிவேகமாக மேல்நாட்டிலும் சிறிதளவில் கீழைத்தேயங்களிலும் காதல் பற்றிய கண்ணோட்டம் பலத்த மாறுதலுக்கு உள்ளாகி விட்டது. உயிர் படைக்கும் உணர்வாக உலகில் முதன்மை பெற்ற காதல் இன்று இரண்டாம் பட்சமாகிவிட்டது. அதாவது, Sex is secondary. சேற்றிலே மிதித்து தண்ணீரில் கழுவும் நிலை ஆண்பெண் இருபாலாரிடமுமே வந்துவிட்டது. அறத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்ற காதலில் இன்று விஷம் கலந்துவிட்டது. உடற்கவர்ச்சியால் தோன்றும் தற்காலிக விருப்பே காதல் ஆகிவிட்டது.

கனடாவில் வெள்ளையர் மத்தியில் "ரோமியோ - ஜூலியற்" என்றாலே நாய் குட்டிக்காதல் (Puppy Love) என எள்ளிநகையாடும் தன்மை. "வந்தமா கண்டமா போனமா" காதல் பிரசித்தி பெற்றது. கண்மறைவான இடங்களில் பயந்து பயந்து வளர்த்த காதல் இன்று பல்லோர் சாட்சியாக புகையிரதங்கள், புகையிரத நிலையங்கள், தெருவோரத் தூண்கள் எல்லாம் வளருகின்றது. அப்பதான் ஒரு "கிக்" இருக்குதோ, வள்ளுவர் சொன்ன மாதிரி, ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல்
காதலார் கண்ணோ யுள.

பொது இடங்களில் ஏதோ தெரியாத மாதிரி அப்படி இப்படிப் பார்த்து ஒரு தடவை கண்ணெறி விட்டுச் சிலிர்த்துப் பின் வேறு எங்கோ பார்த்து யாரும் கண்டு கொள்ளாதவாறு கள்ளமாக காதலை வளர்த்து அறத்தொடு நின்றோம் நாம். எல்லை தாண்டாத, அறத்தொடு நின்ற, கண் மட்டும் பேசிய காதல் அது.

இன்று உள்ளப் புணர்ச்சியை விட உடல் தாகத்துக்கு முக்கிய இடம் கொடுக்கும் காமமே மேலோங்கி நிற்கிறது. "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனும் நிலைமை மாறி வருகின்றது. கற்றலுக்குரியது பிரமச்சரிய காலம் என்பது இன்று இல்லை. பதினான்கு வயதிலேயே பலருக்கு மனக்கட்டுப்பாடு இல்லாத காதல் வந்துவிடுகிறது. அதற்குக் கனேடிய சமூகமும் மாணவரின் சுதந்திரப் போக்கை அனுசரித்து ஆதரவு அளிக்கின்றது. "எதையும் அறியும் ஆவலில் ஆசையை நிறைவேற்ற மாணவர் முயல்வது சகஜம். அதற்குப் பிழையான நோய் பரவாமலும் இளம்மாணவ கர்ப்பத்தையும் தடைசெய்யவும் பார்த்துக் கொள்ளலே எமது கடமை" எனக் கனேடிய ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்.

ஆக, அது தவறுதான் ஆனால் எப்படியும் அது நடக்கப் போகிறது. அதன் விளைவை மட்டும் நாம் தடை செய்ய முயலலாம் என்பது கருத்து.

இந்து மத தத்துவத்தின்படி காயமே ஒரு கோயில் - நமது உடலே ஒரு கோயில். உள்ளமோ இறைவன் உறையும் தலம். அப்படிப்பட்ட கோவிலாகிய இந்த உடலைக் கண்ட கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பைகளும் அசுத்தப்படுத்த விடலாமா? அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என ஆண்களுக்கும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனப் பெண்களுக்கும் கூறிய கற்புநெறியை அலட்சியப்படுத்தலாமா?

ஒருவர் பல்துலக்கிய தூரிகையை மற்றவர் உபயோகிப்பதில்லை. ஒருவர் வாரிய சீப்பினால் மற்றவர் வாருவதில்லை. அதிலேகூட ஒரு கற்பு கற்பிக்கப்பட்டது. அவ்வாறிருக்கும்போது இந்த உடல் மட்டும் பலரால் உபயோகப்படுத்தப்படலாமா? அதற்கு மட்டும் மேற்கில் பதில் இல்லை. ஆனால் கிழக்கில் ஏகபத்தினி விரதனான இராமன் இலக்கணமாகத் திகழ்கின்றான். ஒருவனுக்கு ஒருத்தியென உடல் சுத்தம் உள சுத்தம் பேணிய சாதி நம் சாதி.

தமிழ் மாணவர் மத்தியில் ஒருவகைச் சங்கடமும் தாழ்வுமனப்பான்மையும் தென்படுகின்றன. எல்லாருக்கும் எதிர்ப்பால் நண்பர்கள் இருக்கிறார்களே நமக்கு மட்டும் இல்லையே, பெற்றோரும் அனுமதிக்கிறார்கள் இல்லையே என ஏங்குகிறார்கள். தமது சமூகத்தோடு ஒத்தார் குழுவோடு (Peer Group) ஒத்திசைய நடக்கவேண்டும் அல்லது கணிக்கப்பட மாட்டார்கள். அதனால் அவர்களுக்க நண்பரைத் தெரிவுசெய்வதில் இடர்ப்பாடு ஏற்படுகின்றது. நட்புக்கும் காதலுக்கும் எல்லை வகுக்கத் தெரியாத தன்மை. நண்பர் தெரிவு எப்படி? பெற்றார் அனுமதி வேண்டுமா நண்பருடன் சுற்றலைப் பெற்றார், தமிழ்ச் சமூகத்தினர் கண்டு விடுவார்களா? அந்த நண்பர் எந்த சமூகத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்? தமிழராயின் குலம் கோத்திரம் இப்படி நினைந்து நினைந்து தவிக்கின்றனர்.

"நட்பு காதல் என்பன பற்றி பெற்றோரும் மாணவரும் நன்கு அறிந்திருக்க வேண்டும். மாணவர் அனுபவிக்கும் சுதந்திரம் அவர்களைச் சரியான வழியில் இட்டுச் செல்ல வேண்டும். எதிர்ப்பாலரின் நட்பு ஆரோக்கியமான வழியிற் செல்லும்போது கல்வியிலும், சமூகப் பழக்கத்திலும் இரட்டிப்பு பலனைத் தருகிறது என்பது உண்மை. தொழிலிலோ, கல்வியிலோ ஆணும் பெண்ணும் சேர்ந்து நடக்கும்போது அதில் விசேட தன்மை இருக்கவே செய்யும். ஆனால் இந்நட்பு பாலியல் வழியில் தடம்புரளும்போது தான் தலையிடி தொடங்குகிறது.

கனேடிய சமூகம் தனது குடிசன மதிப்பீட்டின்படி இருபத்தினான்கு வீதம் இளம் கட்டிளமைப் பருவத்தினர் கர்ப்பவதிகள் ஆகின்றார்கள் என்று கவலைப்படுகிறது. தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரின் அனுசரணையோடு முழு மனிதராக வளர வேண்டிய காலத்தில் தமக்கொரு பிள்ளையா? இங்கே தாய் தந்தையர் பொறுப்பெடுக்க மறுத்துவிடுவார்கள். சமீபத்தில் தொலைக் காட்சியில் ஒரு பேச்சுக் காட்சி நடந்தது. இளந்தாய்மார்களும் அவர்களுடைய தாய்மார்களும் தலைமயிரைப் பிடியாத குறையாகச் சண்டை போட்டுக்கொண்டனர். நம்மைப்போலவா? சமூகப்பிணைப்புக் கடமை என ஏற்றுக்கொள்ள? - பொறுப்பேற்கத் தாய்மார் மறுத்துவிட்டனர். தந்தையும் பள்ளி மாணவன். தாயும் பள்ளி மாணவி. குடும்ப வருமானம் ஏது? குழந்தை வளர்க்கும் அனுபவம் ஏது? இதுபற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும். இந்நிலை, இலைமறைகாயாய் நமது சமூகத்திலும் ஒட்டிக் கொண்டுள்ளது. கருக்கலைப்பு நடைபெறுகின்றது. கடும் இரத்தப் போக்கினால் ஆபத்தான நிலையை அடைந்த சம்பவங்களும் உண்டு.

கணவன் இல்லாது கர்ப்பவதியாவது அவமானமாகப்படுவது நம்நாட்டில். இதனால் பெற்றார் அல்லது பிள்ளை தற்கொலையை நாடுவர். இந்த விபரீதத்தை தாங்கும் சக்தி எங்களுக்கு இல்லை. ஆனால், இங்கே இப்படி ஒன்றை "விபத்து" என்றே குறிப்பிடுகின்றார்கள். விபத்தோ விபரீதமோ கனேடிய அரசு கவலைப்படும் அளவிற்கு மாணவர் சுதந்திரம் தவறாகப் பயன்படுகிறது என்பது மட்டும் உண்மை.

"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்று சும்மாவா சொன்னது உலகநீதி. ஆனாலும், "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என ஒளவையார் கூறியுள்ளார். அல்லவா, கண்டதும் காதல் வரலாம் ஆனால் கொண்டதே கோலமாக இருக்கக்கூடாது. இளங் கன்று பயமறியாது. ஆனால் பெரியோரின் துணையும் அறிவுரையும் இருக்குமாயின், வாழ்க்கை நிம்மதியாகக் கழியும். பூரண மனிதராக வாழ முடியம். ஆகையால் (தக்கவயதில்) உலகத்தோரே காதல் செய்வீர்."

- பாரதி

நன்றி சுடரொளி 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் சிந்தனைக்கு

# சீதனச் சிறுமை

பெரிது பெரிதாக "இன்றயை உலகம் இளைஞர் கையில்" என்றோ "நாளை நாமே இந்நாட்டு மன்னர்" என்றோ வாயடித்து சவால்களை எதிர்நோக்கும் இளைஞர்களே! நில்லுங்கள், சற்று நிதானியுங்கள்! அவதானியுங்கள், ஆழ்ந்து யோசியுங்கள்! எத்தகைய சமூகக் கொடுமைகளைக் களைந்து எம் சமுதாயத்தைச் சீராக்கலாம் என்பதையிட்டுச் செயற்படுங்கள். அதன் பின்னர் தலையை நிமிர்த்தி மார்பில் தட்டி "இன்றைய உலகம் எமதே" எனத் தருக்குடன் மொழியுங்கள்.

பூடகமாகப் பேசிச் "சமூகக் கொடுமை" என எதைச் சொல்கிறார்கள் எனத் திகைக்காதீர்கள். இதோ! தமிழர் சமுதாயத்தில் நின்று நிலவும் ஸ்ரீதனம் என்னும் ஆண்களையும் பெண்களையும் சிறுமைப்படுத்தும் -சீரழிய வைக்கும் அந்தக் கொடுமையைத்தான் குறிப்பிடுகிறோம்.

ஆணும் பெண்ணும் சமமான அறிவு ஆற்றல் உடையவர்கள் - சமமான பொருளீட்டும் வல்லமை உடையவர்கள். ஒருவருக்கொருவர் ஆண்டான் அடிமைகள் அல்லர் - ஆனால் வாழ்க்கைத் துணைவர்கள் என்றாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில், சீதனம் மட்டும் செங்கோலோச்சுவது உங்கள் அனைவருக்குமே வெட்கம்! வெட்கம்! சிந்தியுங்கள்.

வாழ்க்கை, கரடுமுரடான தொழில்களில் கிராமத்தைச் சுற்றியிருக்கும் காடுகளிலும் மேடுகளிலும் நடந்து கொண்டிருந்த காலத்திலும்கூட, பிள்ளைப் பெறுதலாகிய உடம்பு நலிவுகளுக்காக "வெளியில் சென்று ஊதியம் தேடுதல்" ஆணுக்காகவும், "வீட்டு நிர்வகிப்பு" பெண்ணுக்காகவும் இருந்து வந்தது. இன்று வாழ்க்கை வசதிகள் இருவருக்குமே பொருள் தேடும் அளவுக்குப் பெருகிவிட்டது. அன்று மனைவியையும் பிள்ளைகளையும் கண்கலங்காமல் உணவு, உடை, வீடு முதலியன கொடுக்கக் கூடியவனையே மணமகனாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவன் தன் வீரத்தை நிரூபிக்கும் சாகஸ விளையாட்டுக்களில் உயிரையும் மதியாது பங்குபற்றியே மகளிரை மணந்தான். இன்று ..........? வாழ்க்கையை மணமக்கள் ஆரம்பிக்கும்போது இருதரப்பு செல்வமும் ஆராயப்பட்டது. ஆணுடைய முதுசம் எவ்வளவு? அதாவது அவன் தன்பெற்றோரிடமிருந்து எவ்வளவு பணத்தை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலை, வீட்டை, காணியைப் பெறுகிறான். அந்த முதுசொத்தோடு வருவான். பெண் வீட்டுக்கு விளக்கேற்ற வந்த மகாலட்சுமி - சீதேவி அவள் கொண்டு வரும் தனம் - ஸ்ரீதனம் எவ்வளவு எனப் பெரியோர்கள் ஆராய்வார்கள். "பெட்டையைப் பயமில்லாமல் கொடுக்கலாம் அவன் நல்ல முதிசக் காரன்" என்பது சமீபகாலமம் வரை பெரியோர்களால் கூறப்பட்டு வந்ததொன்று. முதுசொத்தும் ஸ்ரீதனமும் சேர்ந்து வாழ்க்கைப்பயணத்தின் ஆரம்ப முதலீடாக - தன்னம்பிக்கையை அளிக்கும் சொத்தாயின.

அந்நிய மோகத்துக்கு அடிமையாகி - காற்சடடை போட்டவனுக்கு "மவுசு" ஏற ஏற முதுசொத்து பின்னே தேயத்தேய ஸ்ரீதனம் கூர்மையடையத் தொடங்கியது. மகனின் பெற்றோர் தாம் ஏதோ கல்வி கற்க வைத்ததில் சொத்துக்களையே அழித்துவிட்டது போன்றும் ஆகவே நல்ல விலைகொடுத்து விவாகத்தை நடத்த வேண்டியது என்றும் விதிகைள முன்வைத்தனர். அதனால் ஸ்ரீதனமாக இருந்தது - முதலையின் வீரியம் பெற; அயலே நன்கொடை எனும் குட்டி முதலையும் எழுந்தது.

இளைஞர்களே! யுவதிகளே! இதுதான் வரலாறு ஆண், பிறந்தவுடனே ஆணுக்கு விலை பேசப்படுகின்றது. அதனால் அவன் அறிவும் ஆற்றலும் இழிவுபடுத்தப்படுகிறது. சந்தையில் நல்ல நாம்பனா? குடிவெறியில்லையா? கல்வி, தொழில் எப்படி என விலைபேசப்படும்போது ஆண் அவமானப்படுத்தப்படுகிறான். பெரும் சீதனத்தோடு விவாகம் முடிந்ததும், மாமனார் மாமியார் ஆட்சிக்குட்படுவதோடு தோழியாய் இருக்க வேண்டியவள் கை ஓங்கி குடும்பவாழ்வில் ஆண்அடிமையாகிறான். "என்ன ஞாயம் பேசுறீர் சிரட்டை கொண்டு வந்தனீரோ" எனும் இறுமாப்புப் பேச்சினால் வாழ்க்கைத் துணைவி நடத்துநர் ஆகிவிடுகிறாள். அது ஆடவனின் ஆளுமைக்கும் தன்மானத்துக்கும் சவாலாகிறது. உள்ளத்தில் பட்ட அடிகளைத் தாங்க முடியாதவன், அதனை மனைவி மீதோ பிள்ளைகள் மீதோ, ஆபிசிலோ அல்லது வேறுவகையான வன்முறைகளைக் கையாண்டு, வன்முறையாளன் ஆகிறான் அல்லது பெட்டிப்பாம்பாக அடங்கி உளவியல் நோயாளி ஆகிறான்.

பெண்ணைப் பொறுத்தவரை "பெண்ணைப் போற்றிவளர்" என்ற சமுதாயத்தில் அவள் பிறந்தவுடனேயே கவலையும் கூடப்பிறந்து விடுகிறது பெற்றோருக்கு. அருமை பெருமையாக அன்பூட்டி வளர்க்கப்பட வேண்டியவள் தீராத யோசனையுடன் கடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனத்துடன் அனுபவிக்க வேண்டிய எதையும் அனுபவியாது சதம் சதமாகச் சேர்க்கும் பெற்றோரை வருததுபவளாகிறாள். ஐயாயிரத்தால் அருமையான சம்பந்தம் தட்டிப் போகிறதே என நீங்காத கவலை. அதிகம் படிக்கவைத்தால் அதிகம் ஸ்ரீதனமே எனப் படிப்பை இடைநிறுததும் யோசனை. வயது ஏற ஏற பிள்ளை என நினைக்காது சுமை சுமை என நினைப்பதன் மூலம், ஏன் இந்தப்பிறவி? தற்கொலை செய்துவிட்டால் பெற்றார் பிரச்சினை தீரும் என அவள் ஏங்குகிறாள்.

மணம் முடிந்ததும், மாப்பிள்ளை கார் வாங்கி ஓடுகிறான். நண்பர் குழாமுடன் கூடிக் கொட்டமடிக்கிறான். குடிக்கிறான். தங்கைக்குக் கொடுக்கிறான். அவள் வீடு வாங்கிக் குதூகலிக்க இவள் வாடகை வீட்டிலும், இவளது பெற்றோர் அடைமானம் வைத்த வீட்டிலும் தாம் இழந்த சுகங்களை - பாடுபட்டுத்தேடிய பணம் தமது மகளுக்கும் பயன்படாது வீண் விரயமாவதைப் பார்த்து பார்த்து கண்ணீர் சொரிகிறார்கள். இம்முறை மீள்சுழற்சி ஆகிறது. அன்போடும் அருளோடும் நடாத்தப்பட வேண்டிய இல்லறம் கவலையிலும் வேதனையிலும் கழிய வேண்டுவதா?

இனியொரு விதி செய்யுங்கள்! சமமான தரமுள்ள துணைகளைத் தேடுங்ள். பெற்றோரின் சொத்தை பிள்ளைகளுக்கு சமமாகப் பங்கிடச் செய்யுங்கள். ஒரே வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு - ஆண்களுக்கு எதுவும் கொடுக்காது பெண்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்கும் பெற்றோரின் நயவஞ்சகத்தனத்துக்கு சாவுமணி அடியுங்கள். சமமாக வேலைபார்க்கிறீர்கள் அப்படியிருந்தும் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாயின், முதுசமும் சீதனமும் சமநிலைப்படுகின்றதா எனப் பாருங்கள். எந்தச் சட்டத்தாலும் ஒழிக்க முடியாத ஸ்ரீதனக் கொடுமையை சமபங்கீடு முறையில் ஒழிக்கலாம். பெற்றோர் கடன் வைத்துச் சென்றால் ஆண் பெண் பேதம் பாராது பிள்ளைகள் அனைவருமே பங்கிட்டு ஏற்றுக் கொள்ளுங்கள். இதுதான் நாம் செய்யக்கூடியது - செய்ய வேண்டியது.

இளைஞர்களே! (யுவதிகளும் உட்படத்தான்) இப்போ புரிகிறதா? "எதிர்காலம் எமது கையில்" எனும் தாரக மந்திரத்துள் எத்தகைய பாரிய வேலை காத்திருக்கின்றது என்பது பெற்றோரின் பொருள் முதுசெமாகவும், ஸ்ரீதனமாகவும் மாற்றப்படும் போதுதான் ஸ்ரீதனம் எனும் கொடுமையான சிறுமை அழியும். நீங்களும் தன்மானத்துடன் வாழும் தமிழர் ஆவீர்கள்.

நன்றி: சுடரொளி 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்......

இது ஒரு பழமொழியின் பாதி. பல பழைய மொழிகள், முதுமொழி எனவும், பழமொழி எனவும் பொன்மொழி எனவும் போற்றப்பட்டு வருபவை, ஒன்றைக் கூறி இன்னொன்றை விளக்கும் ஆற்றல் பெற்றவை. நல்ல புலமையுடையோரால் தான் இத்தகைய பழமொழிகளைக் கூறமுடியும். இவை சொற்றொடர்களாக அல்லது வாக்கியமாக அமைவன.

இக்கட்டுரையின் நோக்கம் பழமொழிகளைப் பற்றி எழுதுவது அல்ல. பழமொழிக்கேற்ற ஒரு இலக்கியச் சம்பவத்தை விரித்தலேயாகும். ஒருவன் தன் கோபத்தாலும் லோபத்தாலும் தமிழை எப்படி திரித்துக் கூறப்படுகிறான். வளம்மிக்க தமிழ் மொழியைத் தன் இழிகுணத்துக்கு எப்படிப் பயன்படுத்துகிறான். இதைக் கவிஞர் எவ்வாறு அங்கதச் சுவையடன் கூறுகிறார் என்பதே.

கல்வி கற்றோருக்குத் தமது கல்விக்கேற்ற தொழில் கிடைப்பதில்லை. ஆனால் அக்காலத்தில் அப்புலவர்கள் மதிக்கப்படத் தக்கவர் என்பதைப் புரிந்து கொண்ட சமுதாயம் - அரசன், ஜமீந்தார், குடிமகன் எவரும் - அவர்களுக்கு உணவளித்துப் பாதுகாத்துக் கொள்ளும், அவர்கள் நாடு நாடாகச் சென்று தமது கல்வியின் மேன்மையைக் காட்டி வருவர். அவர்களால் புகழ்ப்படுதலே தமக்கு விமோசனம் தரும் என்பதில் மக்கள் அசையாத நம்பிக்கையடையவர். சில இடங்களில் இந்த சம்பிரதாயம் மாறி வரவே புலவர்களே, அரச சபைக்கோ வீடுகளுக்கோ சென்று தமது புலமைத்திறம் காட்டி அன்பளிப்புப் பெற்றுவருவதுமுண்டு.

அத்தகைய ஒரு புலவர் 19ம் நூற்றாண்டில் வாழ்நதவர். மிகவறுமை ஏற்படவே ஜமீன்தார்கள் வீடு சென்று அவர்களைப் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்றுச்செல்வார். ஒருநாள் ஒரு தனவந்தனின் (பணக்காரன்) வீட்டுக்குச் சென்றார். அவன் ஒரு உலோபி. அவன் வந்து கதவைத் திறந்தான். யாரோ பெரிய புள்ளி வந்திருப்பதாக எண்ணித் திறந்தபோது எதிரேஒரு ஏழை. ஆன உடுப்புக்கூடஇல்லை. கூழைக் கும்பிடு போட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நிற்குது. வந்தது கோபம் அவனுக்கு. "யாரையா நீர்? அவருடைய கோபத்தைக் கண்டு! அதனைச் சாந்தப்படுத்த வேண்டித் தமது பெயரைக் குறிப்பிடாமல் முதலிலேயே புகழத் தொடங்கிவிட்டார் புலவர்.

**சீருலாவு நற் காமதேனுவே தாருவே சிந்தாமணிக்கு நிகரே**
**செப்பு வசனத்தரிச் சந்திரனே எனலும்**

காமதேனு என்பது வரையாது பால் கொடுக்கும் ஓர் தெய்வீகப் பசு என்பதும் இது தேவலோகத்திலே இருப்பதென்பதும் நமது ஐதிகக் கதை. கேட்டபொழுதெல்லாம் பால் சொரியும் அந்தப் பசுவைப்போல நீயும் எனக்குப் பொருள் தரவல்லையல்லவா என்பது மறைபொருள்.

தாருவே எனப்படுவது இங்கே கற்பகதரு எனும் மரத்தைக் குறிப்பது. கற்பகதரு என்பதும் தேவலோகத்தில் இருக்கும் ஒரு மரம் எனவும் அதன் கீழ் நின்று கொண்டு எமக்கு எது வேண்டும் எனக் கேட்டாலும் அந்தப் பொருள் அந்த மரத்தில் தோன்றும் என்பதும் இன்னோர் பழங்கதை. எனவே அம்மரமும் வேண்டியதை வேண்டுவார்க்குக் கொடுப்பதாகும். இந்தப் பணக்காரரும் தனக்கு ஏதாவது தர நினைப்பார் என்பதாக புலவரும் நினைத்தார். அடுத்ததாக சிந்தாமணிக்கு நிகரே என்றார். சிந்தாமணி என்பது "ஒரு விலையர்ந்த மாணிக்கக்கல். அதற்கு நிகராக வேறெங்கும் ஒரு பொருளும் கிடையாது. ஒளிவீசிக் கொண்டு இரவைப் பகலாகக் காட்டிக் கொள்ளும். "கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமோ" என்பார்களே. அதே மாணிக்கக்கல்தான். விலைமதிப்பற்ற அது கல்லாயிருந்தாலும் அது கூடத் தன் ஒளியை உலகுக்குத் தந்து கொண்டிருக்கிறது. (மிருகமாயிருந்தாலும் காமதேனு போல இருக்கலாம், மரஞ்செடியாயிருந்தாலும் கற்பகதருவாக இருக்கலாம். உயிரற்ற கல்லாயிருந்தாற்கூட மாணிக்கக்கல்லாகலாம்). செப்பு வசனத்தரிச்சந்திரனே. மனிதனாயிருந்தாலும்கூட ஒரு புகழ்பெற்ற அரசன்அவன். வாய்மையைக் காப்பாற்றுவதற்காகவே ஒட்டாண்டியானவன். கொடுத்துக் கொடுத்தே உலகில் நிலையான புகழைப் பெற்றவன். அந்த உண்மையே பேசும் அரிச்சந்திரன் வாய்மை காத்த பண்பு உன்னிடம் உள்ளது. அவன் தானம் கொடுத்தது போல நீயும் கொடுக்கலாமே என்ற அர்த்தத்தில் சொல்லவும். மிகுதியைப் புலவர் கூறி முடிக்க அவன் விடவில்லை.

யாரை நீ, மாடு, கல், மரம் என்று சொன்னது? மாடே மரமே கல்லே என்று என்னைக் கூற உனக்கு என்ன துணிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மனிதனில்லையா. மாடா, மரமா, கல்லா. என்னைப் பார்க்க அப்படியா தோன்றுகிறது. டேய் புலவா! அதுதான் போகுது என்று பார்த்தால் "அரிச்சந்திரனெனப் புகழ்ந்து என்னை அவமதித்து விட்டாய். யார் அவன்? அவனைப்போல நான் யாருக்காவது அடிமையாய்ப் போய் சுடலை காத்தேனா? கேவலம் காசுக்கு வழியில்லாமல் எனது மனைவியை யாருக்காவது வேலைக்காரியாக விற்றேனா? இன்று ஏற்பட்ட பழி எப்போ தீருமோ. எத்தனை தலைமுறைக்கு இந்தவசை நின்று நிலைக்கப் போகிறதோ" என இரு கைகளையும் தலையில் அடித்து சீறித் தள்ளுகிறான். வெலவெலத்துப் போனார் புலவர்.

**" சினந்திரு கண்ணும் சிவந்தே**
**யாரைநீ மாடு கல் மரம் என்று சொன்னதுமலால்**
**அரிச்சந்திரன் என்றே அடாத சொல் சொன்னையே**
**யார்க்கு அடிமையாகினேன் யார்கையில் பெண்டு விற்றேன்!**
**தீருமோ இந்தவசை என்றுரை செய் வெகுகொடிய தீயரைப் பாடி நொந்தேன்"**

எத்தகையதொரு பேச்சு. மூலப்பொருள்களின் விளக்கத்தைத் தெரிந்து கொண்டது போலக் காட்டிக் கொள்ளாமல் அதை நேர்க்கருத்தில் வேறொன்றாகத் திரித்து சாதுரியமாக அடிக்கிறான் அந்த உலோபி. இப்படி நம் சமுதாயத்திலும் பலர் இருக்கிறார்கள். ஒன்றை இன்னொன்றாகத் திரித்துக் கூறிச் சண்டைகளை மூட்டிச்செல்வர். சாதுரியமாகத் தப்பிடுவர். பலருக்கும் தம் பிழையான விளக்கத்தைப் பரப்பிக் கேடு சூழ்வர்.

சிலர் ஒன்றையொன்றாகத் திரித்து உணர்வுகளை மாற்றிப் பிறர் மனம் புண்படச் செய்வர். அதாவது "அவர் நல்ல கெட்டிக்காரன்" என்பதை உண்மை உணர்வோடு சொன்னால் அதனை "அவர் பெரிய கெட்டிக்காரனோ" என்று நக்கல் அடிக்கிறார் எனக் கோள் சொல்வார்கள். இப்படி இதைத்தான் "தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்" என்றனரோ இவ்விகாரபுத்தியினரைப் பார்த்து.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு

இவற்றை நாம் ஆராய்ந்து பார்த்தே சொல்பவரின் கூற்றைப் புரிந்து கொள்ளவேண்டும். எருதுக்கும் முடவனுக்கும் வருங்கோபம் நியாயமானதோ அல்லவோ அதனால் சமுதாயம் பாதிக்கப்படக்கூடாது.

நன்றி: துருவதாரகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நிலையில் எம்மவர் யாழில்

இலக்குமி வாழும் இடத்தில் சரஸ்வதி இருக்கமாட்டாள். சரஸ்வதி இருக்கும் இடத்தில் இலக்குமி வசிக்கமாட்டாள் என அறிஞர் கூறிக் கொள்வர்.

கல்வியில் ஈடுபட்டவன் அறிவுப் பசியைத் தீர்க்க நூல்களுக்குள்ளே மூழ்கியிருப்பான் அல்லது கவிதை பண்ணிக் கொண்டிருப்பான். பாடுபட்டு முயற்சிசெய்து பயன்விளை விக்கமாட்டான். எழுத்தறிவு குறைந்த அக்காலத்தில் பாட்டுக்குச் சன்மானமளிக்கக்கூடிய பிரபுக்களும் அரசர்களும் வள்ளல்களாய் இருக்க வேண்டும். மனம் ஒப்பிப் பணம் வழங்க வேண்டும். அப்படிப் பணம் கவிஞர்களுக்கு கிடைக்காவிட்டால் வறுமை வறுமை வறுமை.

ஒரு புலவர் இந்தியாவில் தென்னாட்டிலே இருக்கின்ற சத்தி முற்றம் எனும் ஊரைச் சேர்ந்தவர் சத்தி முற்றத்துப் புலவர் எனப்பட்டார். இவர் வறுமையால் வாடி, பாண்டிய மன்னனிடம் பொன்னும் பொருளும் பெற்று வரச் சென்றார். இருண்டுவிட்டது மழை வேறு. மன்னனின் இருப்பிடம் தூர இடம். எனவே மாறன் பாண்டியனின் நான் மாடக்கூடலில் உள்ள ஒரு சிறு கோவிலைச் சார்ந்த சோலையில் தங்கிவிட்டார்.

அந்நேரம் ஆணும் பெண்ணுமான இரு நாரைகள் தென்பக்கத்தால் வந்து அச்சோலையில் தங்கின. அவற்றைக்க ண்டதும் அவருக்குத் தம் குடும்பத்து நினைவு வந்துவிட்டது. நாரைகள் வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்கின்றன. அவரது கதியற்ற நிலை தன் மனையாளை நினைவூட்டுகிறது. உடனே தன் நிலையைத் தன் மனையாளுக்குக் கூறும்படி நாரைகளைத் தூது அனுப்புகிறார்.

நாராய் நாராய் செங்கால் நாராய்
பனம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய் செவ்வாய் நாராய்
நீயும் நின் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீராயின் சிறந்த
சத்தி முற்றத்து வாவியிற் தங்கி
பாடு பார்த்திருக்குமென் மனைவியைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கோன் மாறன் வழுதி கூடலில்**
**ஆடையின்றி வாடையில் மெலிந்து**
**கையது கொண்டு மெய்யது போர்த்தி**
**காலது கொண்டு மேலது தமீஇப்**
**பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்**
**ஏழையாளனைக் கண்டன மெனுமே!**
**எங்கள் பனங்கிழங்கை நினைவூட்டும் பாடல் இது.**
**சிவந்த கால்களையுடைய நாரையே!**

பனங்கிழங்கைப் பிரித்தது போன்ற உருவில் அமைந்திருக்கும் பவளம்போல சிவந்த அலகுடைய நாரையே! நீங்கள் வடக்கு முகமாகப் போவீர்களாயின் என்வரைவை எதிர்பார்த்திருக்கும் என் மனைவியைப் பார்த்து என்னைப் பற்றிக் கூறுவீர்களாக.
உன் கணவன் அரையில் ஒரு ஆடை மாத்திரம் உடையவன். மழை பெய்கிறது. காற்று அடிக்கிறது. குளிர்காற்றினால் வருந்தி, நடுங்கி, போர்க்க வேறு ஆடையில்லாததால் கைகளினாலே தன் உடம்பைக் கட்டிக் கொண்டு குந்தியிருந்து கால்களினால் மேலுடம்பை அணைத்துக் கொண்டு கூனிக் குறண்டி இருக்கும் அந்த ஏழையைக் கண்டேன் என்று கூறுங்கள் என்கிறார்.

நீங்கள் சத்திமுற்றத்து வாவியில் தங்கும்போது நான்வரும் வழியையே அந்தப் பக்கத்தைதே பார்த்திருக்கும் என்மனைவியைப் பார்த்து இப்படி சொல்லுங்கள் பாண்டியனின் கூடல்மாநகரின் ஒதுக்புக்புறத்தே
"ஆடையின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது போர்த்தி
காலதுகொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டன மெனுமே

உன்கணவன் உன்நிலையை விட மோசமாக இருக்கிறான் என்பதை உணர்த்துவதாக அமைகிறது.
அனுசரிப்பு அரவணைப்பு இல்லாத ஏழையாய் இரு.
அதாவது இன்னமும் பணத்தால் மட்டுமல்ல அனுசரிப்பால் அரவணைப்பால் போதிய உணவு உடை இன்மையால் ஏழையாகத்தான் இருக்கிறானாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பேழைக்குள் இருக்கும் பாம்பு எப்படி சுருண்டு உயிர்த்து உயிர்த்து திணறுகிறதோ அப்படி மூச்சு விடவும் கஷ்டப்பட்டு நடு நடுங்கிக் கொண்டிருக்கிறானாம்.

அந்தக் காலத்தில் நாரை தூதராக அமைந்தது. இன்று நாரைக்குப் பதிலாக விமானம் கடிதங்களைக் கொண்டு வருகிறது. அக் கடிதங்கள் துன்பங்களைச் சுமந்து வருகின்றன. வீடின்றி வாசலின்றி மரங்களின் கீழே மழையிலும் குளிரிலும் பசியிலும் வாடி வருந்தும் எம்மக்கள் நிலையை இப்பாடல் பிரதிபலிக்கிறது. பாண்டிய மன்னன் வருவானோ எம்துயர் தீர்ப்பானோ என்ற ஏக்கம் அந்த ஏழையைப் போல் எம் மண்ணின் மைந்தர்கள் என்னத்தை எதிர்பார்க்கிறார்களோ? இடைவிடாத குண்டுப் பொழிவும், குளிரும் கூதலும், பதுங்கு குழிகளும் உள்ளத்தை மரத்துப் போகச் செய்து விடுமோ? தூது வருகிறது. நாம் என்ன செய்வோம்.

மனனனாகிய அரசும் பொய்த்து விட்டது. உலக அரசாகக் கணிக்கக்கூடிய ஐக்கிய நாடுகள் சபையாகிலும் இதில் தலையிட்டு நம்மவர் நடுக்கத்தைத்தீர்த்து வைக்காதா புலவரே! உமக்குப் பாண்டிய மன்னன் பரிசு தந்தானா என்பதும் தெரியவில்லை. எங்கள் நாட்டுக்கும் சுதந்திரம் என்னும் பரிசு எப்போ கிடைக்கும் என்பதையும் அறியமுடியவில்லை.

நன்றி: துருவதாரகை 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லாத ஆமை

ஆமைக்கும் முயலுக்கும் ஓட்டப்பந்தயமாம். ஆமை விடாமுயற்சியுடன் ஓடி வென்றதாம். முயல் தன் சோம்பலினால் தோற்றதாம். இது கதை.

ஆனால் நாம் குறிப்பிடும் ஆமையோ மிகமிக வேகமாக ஓடக்கூடியது. பிறருக்கு அழிவை ஏற்படுத்தவல்லது. தருணம் பார்த்துத் தான் சார்ந்தவனையே அழித்து விடவும் வல்லது. ஆம் அதன் பெயர் தான் பொறாமை. அதற்கு அழுக்காறு எனும் பெயரும் உண்டு. ஒரு சமுதாயத்தில் ஏற்படும் பிரச்சினைகளுள் அதிகமானவை இவ்வழுக்காறாலேயே வருகிறது.

இயல்பூக்கங்களில் ஒன்றான இது பல மனவெழுச்சிகளின் கூட்டுக்கலப்பாலேயே தோன்றுகிறது. பொறாமையை அதன் உணர்வுகளை கொண்டு வர்ணிப்பது கஷ்டம். ஆனால் மனவெழுச்சிகளான பயம் துன்பம் அவமானம் கோபம் சந்தேகம் முதலியனவும் தாழ்வுபடுத்தப்பட்ட ஆணவ முனைப்பு ஒன்றின் மீதான ஆதிக்கத்துக்கு ஏற்படும் சவால் ஆகியனவும் பொறாமை தோன்றுவதற்கு காரணிகளாகின்றன.

பொறாமை என்றால் என்ன? அது ஏன் எப்போது தோன்றுகிறது? அதன் விளைவுகள் எவை? அவற்றை நிவிர்த்தி செய்ய முடியாதா? எனும்பல வினாக்கள் எம்மைத் துளைக்கின்றன. பொறாமை என்பது பிறன் ஆக்கங்கண்டு பொறுக்க முடியாத தன்மை எனக் கொள்ளலாம். பிறருடைய கல்வி, செல்வம், அந்தஸ்து, முதலியவற்றைக் கண்டு அதுபோலத் தமக்கும் இல்லையே என நினைக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியற்றதும் கோபமானதுமான ஒரு எரிவு உணர்வே பொறாமை. இந்த மனோநிலை அதிகரிக்க அதிகரிக்க வெறுப்பாகிய உணர்வைத் தோற்றுவித்து மனிதனைப் பிழையான செயல்களில் இறக்கி விடுகிறது. அதனால் உலகில் ஏற்படும் துன்பமும் துயரமுமே பொறாமையின் பலாபலன்களாகும். "அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்தீயுழி உய்த்துவிடும்" என்கிறார் திருவள்ளுவர்.

ஒருவனது பொறாமை இப்பிறவியில் அவனது அமைதியைக் கெடுத்து செல்வம் இன்பம் முதலியவற்றைத் துய்க்க விடாமற் செய்து அப்போது தன் நினைவாலும் வார்த்தைகளாலும் செயல்களாலும் செய்யும் பாவங்கள் காரணமாக மறுமையிலும் வெந்தழலிற் புகுந்து வேதனையும் துன்பமும் அடையவைத்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சேர்ந்தவனுக்கு இருபிறவியிலும் துன்பத்தைத் தருவதால் அழுக்காறு ஒரு பாவி என வர்ணிக்கப்படுகிறது. இவர்களுக்கு வேறு பகைவர்களே தேவையில்லை என்கிறது குறள்.

தன்னை உலகம் மதிக்க வேண்டும். அல்லது கணிப்புக்குள்ளாக்க வேண்டும் என்பது தான் மக்கள் அனைவரினதும் விருப்பம். இதற்கு ஒரு சவாலாக ஒரு எச்சரிக்கையாக அமைவன எல்லாம் பொறாமைக்குள்ளாகிறது.

ஒருவன் தன்னிடம் இல்லாதவொன்று பிறரிடம் இருக்கும்போது பொறாமையடைகிறான். ஒருவன் தன்னிடம் இருக்கும் ஒன்று பிறனிடம் அதிகமாக இருக்கும்போதும் பொறாமையடைகிறான். ஒருவன் தன்னிடம் மிதமிஞ்சி இருக்கும் ஒன்று பிறராலும் முயற்சித்துப் பெறப்படும்போது 'அவனிடமும் இருக்கலாமா' என பொறாமையடைகிறான். பலவழிகளாலும் பொறுக்க முடியாத தன்மை ஏற்படும்போது அவன் மிருகமாக மாற முயற்சிக்கிறான். பொறாமை ஏற்படுகின்ற ஆரம்ப தளத்திலேயே அதனுடன் போர்புரிந்து வெல்ல முயற்சித்தலைத் தூய்மைப்படுத்துதல் என்று சொல்லலாம். இது பிழையான வழியிற் செல்லுதலைத் தடுக்கும். பொறாமை தோன்றுகிற விடயம் நமக்கு அப்பாற்பட்டதா? அதற்கான ஆற்றல்கள் நாட்டங்கள் நம்மிடம் உண்டா? உளதாயின் அவற்றை விருத்திசெய்யத் தடையாக இருந்த காரணிகள் எவை? அவற்றை உடைத்தோ மாற்றியோ கையாண்டோ யாம் அந்த நிலையைப் பெறமுடியுமா? இச்சிந்தனைகள் மூலம் ஆராய்ந்து தெளிந்து வழிவகைகளைக் கண்டு பிடித்துச் செயலாற்ற வேண்டும். அல்லது அந்த ஆசையை விலக்கி இயலுமான ஒன்றை நாட வேண்டும். இவை ஏற்புடைய மனப்பான்மை எனப்படும். இது ஆரோக்கியமான போட்டிக்கும் ஆக்கபூர்வமான செயல் களுக்கும் வழிவகுக்கும். ஒரு இலட்சியத்தை நோக்கிச் செயற்பட வைக்கும். ஆவலும் உற்சாகமும் உயிர்த்துவமான ரசிகத் தன்மையும் கரைபுரண்டோடும்.

இதற்கு மாறாக தம் கையாலாகாத் தனத்தினால் கோபமும் அச்சவுணர்வும் சேர்ந்து பிழையான வழிவகைகளில் ஈடுபடுத்தும் மனஎரிவு உணவு தூக்கமின்மை எதற்கெடுத்தாலும் எரிச்சல், புளிப்பான மனவுணர்வைத் தரும். இது எதிர்மறை மனப்பான்மை எனப்படும். தன்னைப் பற்றிய சுயபச்சாத்தாபம் தாழ்வுணர்ச்சி முதலியன உள்ளத்தை அரிக்கும். அவரது நடத்தைகள் ஒரு இலட்சியத்தை நோக்காது பிறரைக் குற்றஞ் சாட்ட வைக்கும். மேன்மேலும் தோல்விகள் பெருகும். ஒரு பாதுகாப்பற்ற நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பயந்த மனிதன் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள எடுக்கும் அசாதாரணமாக உரிமை மீறல்களிற் செலுத்தி விடும்.

இந்தப் பொறாமை சகோதரர்களிடையே காதலர்களிடையே நண்பர்களிடையே மிக அதிகமாகக் காணப்படுகிறது. எப்பேர்ப்பட்ட பெரிய அறிவாளிகளையும் தந்நிலையில் தாழ வைக்கிறது.

பிரஹஸ்பதி எனும் முனிவர் தேவர்களுக்கே குருவாக விருந்து சகல வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் கரைகண்டவர். அவருடைய தம்பியார் சம்வர்த்தரும் நிறையப்படித்தவர். அத்தோடு அனைவராலும் நல்லவர் எனப் போற்றப்பட்டவர். நல்லவர்கள் மீது ஏன் இவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காகவே உலகில் பொறாமை ஏற்படுகிறது. அதனால் பிரஹஸ்பதி சம்வர்த்தரைப் பலவிதத்தாலும் இம்சை செய்தார். இவரது உபத்திரம் பொறுக்க முடியாத சம்வர்த்தர் பைத்தியக்காரன் போல நடித்து ஊரூராக ஓடித்திரிந்தார். அப்போது மருத்தர் எனும் ஓர் அரசன் தான் பெற்ற பெரும் நிதிகொண்டு பெரும் யாகம் என்றைச் செய்ய விரும்பி பிரஹஸ்பதியை அதனை நடாத்தித் தருமாறு வேண்டிக்கொண்டான். அந்த யாகத்தைச் செய்தால் தேவர் புகழைமங்கடிக்கத் தக்கதாக மருத்தராசா பெருமை உயர்ந்து விடுமெனக் கருதி மறுத்துவிட்டார். மருத்தராசா சம்வர்த்தரைத் தேடிப்பிடித்து சம்மதிக்க வைத்துவிட்டான். அதனையறிந்த பிரஹஸ்பதிக்கு உள்ளம் எரிய எரிய ஊண் உறக்கம் இன்றி மெலிந்து விட்டார். இந்திரன் பலபுத்திமதிகளைக் கூறியும் குரு ஏற்கவில்லை. எனவே வேண்டுகோள்படி இந்திரன் யாகத்தை அழிக்கச் சென்றான். ஆனால் பிரமச்சரிய விரதம் மேற்கொண்டு பெற்ற தபோபலத்தினால் சம்வர்த்தர் வெற்றி கொண்டதோடு தேவேந்திரன் யாகத்திலும் பங்குபற்றி அவியும் பெற்றுச் சென்றான் என்பது கதை. கல்வியின் முதல்வரான பிரஹஸ்பதி முனிவரே பொறாமைப்பிடியில் சிக்கினாரென்றால் சாதாரணமான மக்கள் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

ஒரு கலைஞனால் இன்னொரு கலைஞனான நண்பன் ஒரு குழுவுக்கு அறிமுகம் செய்த வைக்கப்படுகிறான். புதியவனின் ஆற்றலும் செயற்பாடுகளும் குழுவினரின் அபரிமிதமான பாராட்டுக்களைப் பெற்றுக் கொடுக்கிறது. தன்செல்வாக்குக் குறையப் போகிறதே எனும் அச்சத்தால் பழையவன் பொறாமை கொள்கிறான். குழுவினர் அவன் மீது அவதூறுகள் கதைப்பதாக புதியவனுக்கு கூறுகிறான். நண்பன் மீது அசாத்தியநம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கோபம் மீதூர்ந்து அக்குழுவையே தவிர்த்து விடுகிறான். புதியவன். இங்கே அவனது புத்திசாதுரியத்தால் இன்பம் அனுபவித்த குழுவினருக்குத் துன்பம் ஏற்படுகிறது. நியாயமற்ற கோபத்தினால் நல்லவர்கள் மீது கோபமும் துயரமும் ஏற்பட்டு அவன் வருந்துகிறான். இத்தகைய ஈனங்களையே பொறாமை செய்கிறது. பொய் சொல்ல வைக்கிறது. கோள் சொல்ல வைக்கிறது. தீயது செய்ய வைத்து இன்பப்பயன்பாட்டை அழிக்கிறது.

தமது இலட்சியங்களுக்கு ஏற்ப வாழ நினைப்போர்மீது கொள்ளும் பொறாமையால் அவன் அவ்இலட்சியங்களுக்கு மாறாகவே வாழ்கிறான் என்று கதைகட்டி நிரூபிப்பதும் சிலர் பொழுது போக்காகிறது.மருந்துக்கும் குடிக்காதவனை அவனா நானும் அவனும் குடிக்காத போத்தல் உண்டா" என்பதுபோல் இலட்சியங்களுடன் வாழ்பவர்களுக்கு இப்பொறாமை களங்கம் கற்பிக்கிறது.

என்னால் முடியும் எனும் வீரமான மனவுறுதியோடு மன உணர்வுகளை அடக்கமுயல்வதும் அல்லது ஆக்க பூர்வமாகச் செயல்பட வைத்தலுமே பொறாமையால் ஏற்படும் தீங்குகளை அழித்துவிட உதவும்.

அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணாது அழுக்கறுப்பவன்" குறள்

நன்றி துருவதாரகை 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. வேலுப்பிள்ளை இராமலிங்கம் பற்றி.......

அகில உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டிருக்கின்ற இலங்கை மணித்திருநாட்டில் பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் தமிழ் ஈழத்திலே, யாழ்ப்பாண இராச்சியத்தின் இராசதானியாக விளங்கிய நல்லூரிலே கள்ளியங்காடு எனும் கிராமத்திலே அமரர் வேலுப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் கடைசிப் புதல்வராக 1927ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை பிறந்தார் திரு. இராமலிங்கம் அவர்கள்.

ஆரம்ப, கனிஷ்ட இடைநிலைக்கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர்நிலைக்கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் பயின்றார். படிக்குங் காலத்தில் மெய்வல்லுநர் போட்டிகளில் சாம்பியன் வெள்ளிக்கிண்ணங்களைப் பரிசாகப் பெற்று வந்தார். கல்வியிலும் முதல்மாணவர் நால்வருள் ஒருவராக வருவார்.

தொடர்ந்து படிப்பதைவிட உழைப்பதிலே ஆர்வங்காட்டி அஞ்சல் திணைக்களத்தில் உதவித்தபாலதிபராகச் சேர்ந்தார். மீரிகம, கல்முனை, கொழும்பு, அனுராதபுரம், காங்கேசன்துறை ஆகிய இடங்களில் உபதபாலதிபராகவும், புகையிரத தபாற்சேவை, திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேற்பார்வை அதிகாரியாகவும், தபாற்பொதி அலுவலகம் சீனன்குடா, புத்தளம், களுத்துறை ஆகிய இடங்கில் தபாலதிபராகவும், யாழ்ப்பாணம் பொலநறுவை ஆகிய இடங்களில் தலைமைத் தபாலதிபராகவும் 37 வருடங்கள் கடமை ஆற்றினார்.

ஆச்சிப்பிள்ளை, கனகம்மா, குஞ்சரம்மா ஆகிய மூத்த சகோதரிகள் வளங்குன்றா வேளாண்குடும்பங்களாகத் திகழ்ந்தனர். இவருடன் கூடப்பிறந்த அண்ணன்மார் குமாரசாமி, மயில்வாகனம், அருணாசலம் ஆகியோர் சிறந்த ஆசிரியர்களாக விளங்கினர். அவர்களது மனைவியரான அண்ணிமார் அன்னம்மா, தில்லைமுத்து, இராசம்மா ஆகியோரும் புகழ்பெற்ற ஆசிரியர்களாக விளங்கினர்.

அனைவரது வாரிசுகளும் கல்வி செல்வம் ஆகியவற்றால் சிறந்து சித்தப்பா, மாமா என அன்பு செலுத்தி வந்ததோடு இன்னும் பல வாரிசுகளையும் படைத்துள்ளனர். ஆனால் சகோதரர் அறுவருமே இவர் உயிருடன் இருந்தபோதே காலமாகிவிட்டனர்.

இருபத்தேழு வயது இளைஞனாக இருந்த காலத்தே அண்ணாமார் தம்மைப்போல ஒரு ஆசிரியரையே பெண் பார்க்கத் தொடங்கினர். 1956ம் ஆண்டு காங்கேசன்துறையில் பிரபல வர்த்தகராக விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு M.A. சின்னத்தம்பி, செல்லமுத்து தம்பதியரின் மூத்த திருமகளான வள்ளிநாயகி (குறமகள்) ஆசிரியரைத் திருமணம் செய்து வாழ்க்கைத் துணைவி ஆக்கிக் கொண்டார். சசிகலா, கலைவாணி, குருமோகன், துளசிராம், குகபாலிகா எனும் குழந்தைச் செல்வங்களை பெற்றெடுத்து வளர்த்தார். மூன்றரை வயதில் குருமோகன் மறைந்து ஆற்றொணாத் துயரைத் தந்துவிட்டான்.

**புறத்திணை:** தனது தொழிலைப் பொறுத்தவரை அவர் கடமையுணர்வுக் கூர்ப்பு உடையவர். சகஊழியரோடு நன்கு பழகி அவர்களுடைய இன்பதுன்பங்களிலும் பங்குபற்றித் தேவையான உதவிகளையும் செய்வார். நேசத்தால் நிறைந்த நெஞ்சர். அதிர்ந்து பேசாதவர். சொல்லிலும் பார்க்க செயலையே விரும்புவார். செயலிலும் காட்டுவார். தன் கண்காணிப்பின் கீழுள்ள ஊழியர்களின் நலங் காப்பதிலும் உரிமைகளை வென்றெடுத்துக் கொடுத்தலிலும் அக்கறை காட்டுவார். 'பிறரின் நோய் தன் நோய் போல்' பேணும் தன்மையாளர். ஆயினும் தொடர்ந்து தொல்லை தந்து கடமை தவறுவோர் மீது மிகக் கடுமையைப் பிரயோகித்து இறுக்கமாக நின்று கொள்வார். மௌனமாக எழுத்து மூலம் தான் கண்டனங்களை மேற்கொள்வார். அவர் கண்ணுக்கு எதுவும் தப்பாது. ஆனால் அப்பாவிபோல நடந்து கொள்வார்.

அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் பிரதேச சபைகளிலே காலத்துக்குக் காலம் செயலாளராகவும் தலைவ ராகவும் கடமையாற்றினார். தாய்ச்சங்கத்தின் செயலவை உறுப்பினராகவும் இருந்தார். “போஸ்ட்மார்க்” எனும் சங்கத்தின் பத்திரிகைக்கு விடயதானம் செய்வார். பாதிக்கப்பட்ட பல உறுப்பினருக்கு பரிந்துரை செய்யும் தொழிற்சங்க வாதியாகவும் செயற்படடார்.

**அகத்திணை:** இல்லறவாழ்வு நல்லறமாகவும் பல்கலைக் கழகமாகவும் அமைந்தது. தமது வாழ்க்கைத் துணைவியரின் கல்வி சமூகசேவை போன்ற ஆர்வங்களைத் தடைசெய்யாதது மாத்திரமல்ல - ஊக்குவித்தும் உதவிசெய்தும் உயர்த்தி வைத்தார். கல்வித் தகைமைகள் உயர்ந்துகொண்டேபோக பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்தார். பிள்ளைகள் கல்வி கற்கும் வயதில் கிடைத்த பதவியுயர்ச்சிகளை ஏற்காது தவிர்த்து வந்த தன் மனைவிக்கு அழுத்கம ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு விரிவுரையாளர் பதவி கிடைத்தபோது அதனை ஏற்கும்படியும் தான் மாற்றல் எடுத்து வந்து பிள்ளைகளோடு நிற்பதாகவும் ஒருவருடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாய்க்கு வரலாம் எனவும் கூறி அவ்வண்ணமே செய்தார்.

எல்லாத் தந்தைமார் போலேயும் இவர் தன் புத்திரிமார் டாக்டராக அல்லது ஆசிரியராகவும் புத்திரன் பொறியியலாளராகவும் வரவேண்டும் என ஆசைப்பட்டார்.

சிரேஷ்ட புதல்வி **சசிகலா** அவர் மனம்போலவே திறமையாகக் கற்று மருத்துவம் பயின்று வைத்தியராக வெளிவந்து சில விசேட பயிற்சிகளையும் பெற்றார். **டாக்டர் செந்திலால் செந்திசண்முக நாதனைக்** கணவனாக அடைந்து கனடா வந்தார். இங்கே கல்விகற்று கணவன் புற்றுநோய் நிபுணராக சசிகலா மனநோய் நிபுணரானார். 1990 இல் மூத்த புதல்வன் **சயன்** தனது ஒருவயதில் பாட்டாவைப் பார்க்க அம்மாவுடன் கொழும்பு வந்து அவர் மடியிலிருந்து விளையாடி மகிழ்வித்துத் திரும்பினார். அதன்பின் அவர் கனடாவுக்கு வருவதை பெரிதும் விரும்பியிருந்தார். **சரண்யன்** எனும் பேரன் பிறந்தபோது அவரில்லை.

இரண்டாவது புதல்வி **கலைவாணி** பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர். கண்டியில் கற்பித்துக் கொண்டிருந்தார். கனடா வந்தபின் மானிப்பாயைச் சேர்ந்த **பாலச்சந்திரன் நாகேந்திரனின்** (கண்ணன்) துணைவியானார். **துளசிராம்** (பாபு) அவரது செல்லமைந்தன். கல்வி கற்று முடிந்ததும் இந்தியா சென்று இயந்திரப் பொறியியலாளராக முதல் வகுப்பில் சித்திபெற்றார். கொழும்பிலே சில மாதங்கள் உழைத்து முதல் சம்பளத்தினை தனது தந்தை கையில் கொடுத்து அவரைப் பரவசப்படுத்தினார். சில வாரங்களுக்குள்ளாகவே தந்தை தன் பயணத்தை மேற்கொண்டு விட்டார். முதுபொறியியல் மானியாகிய துளசிராம் **மஞ்சுளா** திவாகரமூர்த்தியை விவாகம் செய்து **றோசாந்த் அருண், தஸ்மி இனியா** எனும் இரு குழந்தைகளுக்குத் தந்தையாகியுள்ளார்.

**குகபாலிகா** அவர் மடியில் வைத்துச் செல்லங்கொட்டி வளர்த்த கடைசிப் பெண் குழந்தை. அவர் சுகவீனமுற்ற காலத்தில் அவருக்கு வேண்டிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பெண். குண்டுவீச்சுக்களின்போதெல்லாம் ஓடிஓடி இடம்மாறும் போதும் அப்பா அம்மா மீது கவனம் எடுத்து உதவி செய்த பெண்பிள்ளை அந்த றோசா. அரசபயங்கரவாதத்தின் கொடுமை கண்டு ஆத்திரமடைந்து மண்மீட்புப் போரில் குதித்துவிட்டாள். குழந்தைபோலக் கேவிக்கேவி அழுதார். 1997இல் அவளும் மாவீரராகி விட்டாள். மேஜர் துளசி. அமரர் திரு. இராமலிங்கம் கலை இலக்கியங்களில் மிக ஈடுபாடு கொண்டவர். விவாகத்தின் முன் யாழ்ப்பாணத் தேவனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகப்பைத்தியமாக திரிந்தார். தொழிலில் இருக்கும்போது அரசஉத்தியோகத்தரால் நடாத்தப்பட்ட உடையார் மிடுக்கு நாடகத்தில் உடையாரின் புத்திரியாக வந்தார்.

உலகமாகிய நாடகமேடையில் கடைசி அங்கம் வந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தலைமை அஞ்சலகத்துக்கு பிரதம அஞ்சலதிபராக கடமையாற்ற வருகிறார். காலனின் முதலாவது ஓலை வருகிறது. யாழ்ப்பாணத்தில் கொள்ளையடித்தல் ஒருகலையாக மாறியபோது அலுவலகத்தில் துவக்குமுனையில் கடத்தி வரப்பட்டு இலட்சக்கணக்கான பணம்கொள்ளையிடப்பட்ட போது ஏற்பட்ட அதிர்ச்சியிலும் ஆத்திரத்திலும் கொதிப்பிலும் நோயுற்று பாரிசவாதத்துக்கு ஆளானார். வலப்பக்கம் செயலிழந்தது.

ஐம்பத்தைந்து வயதிலும் மிக இளைஞராகக் கருதப்பட்ட அமரர் இராமலிங்கம் அவர்கள் அன்றிலிருந்து சமூகப்பணி உத்தியோகம் அனைத்தையும் இழந்தவராய் வீட்டிலே முடங்கினார். ஏற்ற வைத்தியங்கள் செய்வித்தபடியால் தனது சிறுசிறு வேலைகளை இடக்கையால் செய்யப் பழகிக்கொண்டார். இத்தகைய நோயுள்ளவர்கள் வீட்டினரைப் படாதபாடுபடுத்தி விடுவார்கள். ஆனால் அமரரோ அனுசரணையாக இருப்பார். ஏதும் தேவையெனில்கூட பொறுமையோடு காத்திருப்பார். மனைவிமக்கள் தனக்கு கழுவத்துடைக்க பாடுபடும்போது "பாவம் பாவம்" எனச் சொல்லி அநுதாபப்படுவார். சிறுவனான பெறாமகன் அச்சுதனோடு விளையாடியும் விளையாட்டு காட்டியும் பொழுதுபோக்குவார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அவதானித்துப் பின்னர் மற்றவர்களுக்குக் கூற முயற்சிப்பார்.

ஆறுவருடங்களின் பின் கனடாவுக்கு வருவதற்காக கொழும்பில் நின்றபோது 1991ம் ஆண்டு இரத்தஅழுத்தம் உயர்ந்து இருதயநோய் வந்து காலனின் கைப்பிடியில் சிக்கிவிட்டார்.

நல்லதொரு குடும்பத்தின் உத்தமத் தலைவனாக வாழ்ந்திருந்தார் என்பது பத்தாண்டுகால மறைவின் பின்னும் உணரமுடிகிறது.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைநெறிக் கோட்பாடுகளுக்கமைய வாழ்ந்து காட்டிய செம்மல்

திரு. வே. இராமலிங்கம் அவர்கள் 1949ம் ஆண்டில் அஞ்சல் அதிபர் சேவையில் சேர்ந்து 35 வருடங்களுக்குமேல் பணிபுரிந்துள்ளார். கல்முனை, யாழ்ப்பாணம், திருகோணமலை, மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம் ஆகிய இடங்களில் பல தரப்பட்ட தரங்களில் சேவை புரிந்த இவர், ஈற்றில் பொலநறுவை அஞ்சலகத்தில் பிரதம அஞ்சலதிபராகப் பணிபுரிந்து சுகவீனமுற்ற நிலையில் இளைப்பாறினார். யாழ். தபாலகத்தில் பிரதி பிரதம அஞ்சலதிபராக இருந்த காலை ஆயுதம் தாங்கிய அனாமதேய வல்லுனரால் அச்சுறுத்தப்பட்ட காரணத்தினால் மார்பு நோயினால் பீடிக்கப்பட்டு வருத்தமுற்றார். அச்சுறுத்தல்கள் எக்கோணத்திலிருந்து ஏற்பட்டபோதிலும் அவற்றிற்கெல்லாம் முகம்கொடுத்து அஞ்சலக வேலைகள் பாதிக்கப்படாவண்ணம் கருமம் ஆற்றிய கடமை வீரர் அவர் இன்று எம்மத்தியில் இல்லை. ஆனாலும் அவர் எமது நினைவலைகளில் நீந்திக்கொண்டேயிருக்கிறார்.

ஆற்றொணாத்துயரில் அமிழ்ந்திருக்கும் அன்னாரின் மனைவி மக்களுக்கு அவர் விட்டுச் சென்ற அரும்பண்புகளே அழியாப் பொக்கிஷங்கள். அரச சேவையிலானாலும்சரி சமூக மனைவாழ்க்கையிலானாலும்சரி வரையறுக்கப்பட்ட வாழ்க்கை நெறிக்கோட்பாடுகளுக்கமையவே வாழ்ந்து காட்டிய செம்மல் - என் அரிய நண்பர் ஒருவருக்கு இரங்கல் செய்தி எழுத நேரிட்டதேயென்று ஒருபுறம் ஏக்கம், மறுபுறம் ஒரு தயக்கம். காரணம் - அவர்மேல் வைத்த அன்பும் பாசமும் என் மனதை உருக்கி ஈர்க்கின்றது.

அஞ்சல் தொலைத்தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் ஆரம்பகாலந்தொட்டே உறுப்புரிமை வகித்து உரிமை கொண்டாடுவதில் பெருமிதமும் பெரும் மகிழ்ச்சியும் கொண்டவர். ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைத்து தாய்ச் சங்கத்தின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் வழிகோலினார். அங்கத்தவர்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். யாழ்.திருமலைக் கிளைச்சங்கத்தின் தலைமை பதவிகளை அலங்கரித்து உறுப்பினர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டினார். கிளைச்சங்கங்கள் மிக மிக சுறு சுறுப்பாக இயங்குவதற்கு இடையூறுகள் பல தடைக்கற்களாக இருந்தபோது அவற்றினை உடைத்தெறிந்து இலட்சியப் பாதையில் வீறுநடைபோட்டார். சங்க அங்கத்தவர்கள் மத்தியில் "ராம்" என்றும் "ராமா" என்றும் அன்புடன் அழைக்கப்பட்ட கவர்ச்சிகர ஏந்தல் இவர் என்று கூறினால் மிகையாகாது.

அன்னாரின் ஆத்துமா சாந்தியடையப் பிரார்த்திப்போம். அலக்கண் எய்தியிருக்கும் மனைவி மக்களுக்கு எனது அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.

Of men of fruitful ilfe, who kindly benefits dispense the world unites to praise the Noble Excellence.

29-01-1991

கா. கனகசுந்தரம்
(அஞ்சல் திணைக்கள வழங்கல்
பிரிவின் அத்தியட்சர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா

**சசி சொல்வது**

இந்த வருடம் எங்கள் தந்தையார் இறந்து பத்து வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்றும் அவரது நினைவுகள் எம்மனதில் பசுமையாக இருக்கின்றன. எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொருபடியிலும் அவருடைய இழப்பை நாம் உணருகிறோம். அதுவும் அண்மையில் பிறந்த தம்பி மகள் தஸ்மினாவைக் கொஞ்சிச் செல்லங்கொட்டும்போது அப்பா இப்போ இருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருப்பார் என்று பேசுவோம். ஏனெனில் அவருக்கு சிறுகுழந்தைகள் என்றால் நல்ல விருப்பம். றோசாவை 2, 3 வயதில் கலைத்துப் பிடித்து விளையாடுவார்.

இப்போது இங்கே எவ்வளவு கோயில்கள் உண்டு. அவர் வந்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார். நல்லூர் திருவிழாவுக்கு விரதம் இருப்பார். தேருக்கு அங்கப்பிரதிட்டை செய்து வீட்டில் பூசை விருந்து நடக்கும். மாவைக்கந்தனுக்கு பித்துக்குளி முருகதாஸ், சுந்தராம்பாள் போன்றவர்கள் வரும்போதும் நல்ல நல்ல நாதஸ்வரக்கச்சேரி வயலின் கச்சேரி நடக்கும்போது தவறாமல் எங்களைக் கூட்டிச் செல்வார். சங்கீதம் கற்க ஆதரவு தந்தார். எங்கள் குலதெய்வம் குருநாதரின் கும்பாபிஷேகத்தின்போது இரவுபகலாக தொண்டுகள் செய்வார். எங்களையும் ஊக்குவித்து செய்யவிடுவார். நிர்வாகப்பணிகளில் ராசாமாமாவோடு சேர்ந்து செயலாற்றினார்.

1983இல் அகதிகள் கப்பலில் வந்து காங்கேசன்துறையில் இறங்கி நடேஸ்வராக் கல்லூரியில் தங்கியபோது மருத்துவமாணவியான நான் வைத்தியப்பிரிவில் குடும்பம் முழுவதுமே ஒவ்வொரு பிரிவில் சேவை செய்ய வைத்தார். அப்பா தொலைத்தொடர்பு சேவைப்பகுதியில் இருந்து கப்பல்கள் வந்து போகும் நேரங்கள் வெளிமாகாணங்களுக்கான தொடர்புகள் என இரவும் பகலும் சேவையாற்றினார்.

எங்களை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்பது பெற்றாரின் விருப்பம். ஏ. எல். படிக்கும்போது கெட்டிக்காரருக்கு ரியூசன் தேவையில்லை என அம்மா ரியூசன் எடுக்க விடவில்லை. மகாஜனாவிலும் அதிபர் ஆசிரியர்களுக்கிடையே ஏதோ குழப்பம். ஏதேதோ சேர்ந்து எனக்கு வந்த புள்ளிகள் மருத்துவக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக்குப் போதாது. இரண்டாம் முறையும் படிக்க விருப்பம் இல்லை. துவண்டு விட்டேன். வேலை தேட விரும்பினேன். அப்பா விடவில்லை. மருத்துவத்துக்கு ஏற்க படிக்கும்படி கட்டாயப்படுத்தினார். அல்லது ஆசிரியர் வேலைதான் என்றார். பாடங்களுக்கு ரியூசன் ஒழுங்கு செய்து கூடிய முயற்சியும் எடுத்து அப்பாவின் இலட்சியத்தை நனவாக்கிவிட்டேன்.

எங்கே போய் வந்தாலும் முகங் கைகால் கழுவாமல் ஒன்றுமே குடிக்கவோ சாப்பிடவோ மாட்டார். வருத்தம் வந்த பின்னும் காலை மாலை முகங்கழுவி சுவாமி கும்பிடத்தவறமாட்டார். சமையல் சாப்பாடென்றால் நல்ல விருப்பம். ஊரில் நிற்கும்போது மயிலிட்டிக்குப் போய் பெரிய மீனெல்லாம் வாங்கி வருவார். ஆடு கோழி என்று மற்றப்பக்கம். அம்மா"ஐயையோ" என்று விடுவா. "தவளை வெட்டிப் படிக்க ஏலும். மீன் வெட்டத் தெரியாதோ" என்று மளமளவென்று வெட்டித்தள்ளிவிடுவார். "ஏன் வாங்கிக் குவிப்பான்" என்றால் "இந்தப்பாடெல்லாம் பட்டு உழைக்கிறது இந்த ஒருசாண் வயிற்றுக்குத்தானே" என்பார்.

அவருக்குக் கோபம் வராது. வந்தாலும் கத்திக் கதைக்க மாட்டார். எமக்கு திருமணப் பதிவு நடந்தபோது கொழும்புக்கு மிகச் சிரமப்பட்டு வந்து சேர்ந்தார். ஏழு எட்டுவயதாக இருக்கும்போது மருமகனைக்(லால்) கண்டதுக்கு அப்போதுதான் முதன் முதலில் காண்கிறார். மகிழ்ச்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இதரபிரதேசங்களோடு தொடர்பற்ற ஒருநாளில் நான் கனடா வர நேர்ந்தது. ஒருவரையும் காணமுடியவில்லையே என வேதனையோடு வந்தேன். அவர்கள் இல்லாமலேயே என் விவாகம் நடந்தது. அப்பாவுக்கு வயது ஏறஏற குழந்தைகளில் நல்ல ஆசை. சித்தியின் பிள்ளைகளை அரவணைத்து மகிழ்வார். எனவே எமக்கு முதல் மைந்தன் பிறந்ததும் கொண்டு சென்றேன். அவர்களும் கொழும்பு வந்துவிட்டனர். ஒருவயதுக்குழந்தையாக அப்பாமடியில் கிடத்தினேன். அவருடைய சிரிப்பும் மகிழ்ச்சியும் சொல்ல முடியாது. ஒருமாதமாக விட்டுப் பிரியாமல் அன்போடு அரவணைத்தார். அவனோடு விளையாட கெதியாக வருவேன் என்று சொன்னார். ஆனால் கொடுத்து வைக்கவில்லை. 2வது மகன் சரண்யனுக்கும் பாட்டா என அழைக்க பிராப்தம் இல்லை. எனினும் பாட்டா இங்கே போசப்படுகிறார். எங்கள் அப்பா அப்பாதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணி சொல்வது

எல்லாராலும் விரும்பப்பட்ட எங்கள் அப்பாவை சிறுவயதில் "தருமு" என அழைப்பார்கள். தர்மலிங்கம் எனத்தான் பெயர்வைக்கச் சொல்லிவிட்டதாம். S.S.C. படிக்கும்போதுதான் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் இராமலிங்கம் என்றிருந்ததாம்.

அப்பா எல்லோருடனும் அன்புடன் நடப்பார். எங்களோடு மிகப் பிரியமாக இருப்பார். விடுமுறை எப்போது வருமெனப் பார்த்திருப்போம். தாம் வேலை செய்யும் ஊர்களுக்கு காரில் அழைத்துச் செல்வார். அந்த பிரதேசத்திலுள்ள பிரதான இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்வார். இலங்கையிலேயே சுற்றாத இடமேயில்லை. அம்மா அழுத்கமவுக்கு வேலைக்குச் சென்றபோது நாம் படிக்க வேண்டும் என்பதற்காக இரவு 11½ மணிவரை விழித்திருப்பார். இரவில் சாப்பிட்டபின் நூறு அடி நடக்க வேண்டுமென முற்றத்தில் தம்மோடு நடக்க வைப்பார்.

மாவிட்டபுரம் கொடி ஏறினால் ஒவ்வொரு நாளும் வேலையால் வந்து எமது வீட்டுப்படிப்பை முடிக்கப் பண்ணிக் கோவிலுக்கு அழைத்துச் செல்வார். கோயிலுக்கு நடந்து போறது நல்லதென்பார் ஒருமைல் தூரமும் நடந்தே போவோம். எங்கள் கோவிலில் சிரமதானப் பணிகளை விரும்பிச்செய்வார். தம்பி தங்கையுடன் சதுரங்கம் விளையாடுவார். எம்முடன் பாட்மின்ரன் ஆடுவார்.

வருத்தம் வந்தபோது மிகவும் குழந்தையாகிப் போனார். நாங்கள் வெளியே போனால் வருமட்டும் வாசலில் பார்த்திருப்பார். நண்பர் உறவினரைக் கண்டால் சாடையாய் வெம்பி அழமுனைவார். ஆனால் உடனேயே உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வார். பகலில் சாய்மனைக் கட்டிலில் வாசலில் காத்திருப்பார். தெருவால் போகிறவர்கள் அஞ்சல் ஊழியர் என எல்லாம் சைக்கிளால் இறங்கி வந்து சுகம் விசாரித்துப் போவார்கள். ஒரு சிரிப்போடு சொல்வதைக் கேட்டிருப்பார்.

அப்பா உங்கள் கனவுகளின்படி நான் ஒரு பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியராக முடிந்தது.

உங்களையே பலவிதங்களிலும் பிரதிபலிக்கும் ஒரு கணவரை அடைந்துள்ளேன் மகிழ்ச்சியாக வாழ்கிறேன்.

தமிழ் ஈழங்கிடைக்க வேண்டும். போய் எமது வீட்டில் இருக்க வேண்டும் என எம்மனம் விரும்பினாலும் றோசாவும் நீங்களும் இல்லாத வீட்டை நினைத்துப் பார்க்கவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிம்மாசனமான சாய்மனைக்கதிரையும் நீங்களும் இல்லாத வீட்டைக் கற்பனை பண்ணவே முடியவில்லை.

## பாபு சொல்வது

எனக்கோ எல்லாம் கனவாகத் தெரிகிறதப்பா. எங்கோ இருக்கிறீர்கள். மாற்றலாகி அல்லது லீவெடுத்து வருவீர்கள் போலத்தான் உணர்வு. உங்கள் இயல்புகள் பற்றி அக்காமார் எழுதிவிட்டார்கள்.

உங்களை அஞ்சலகத்தில் சந்திக்கின்ற நண்பர் சென்ற்யோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராசா பற்றி அடிக்கடி கூறுவீர்கள். ஒருநாள் அக்கல்லூரியிலேயே என்னைச் சேர்த்து விட்டீர்கள். ரியூஷனும் அங்கே என்பதால் வீடு வந்துபோகும் நேரத்தை மிச்சம் பிடிக்க நண்பர் ஒருவர் வீட்டில் விட்டுவிட்டீர்கள். வீட்டைப் பிரிந்து ரொம்பக் கவலைப்பட்டேன். ஆனால் எனது உயர்வுக்கு அது பயன்பட்டது.

அஞ்சலகத்தில் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. கவலை உங்களுக்கு. சிறிது நாட்களில் பாரிசவாதம். இரத்த அழுத்தம் அதிகமானதைக் கூடக் கவனிக்காத கடமையுணர்வு, வைத்தியசாலையில் உங்களருகே நான். அடிக்கடி மனந்தளர்ந்து விடுவீர்கள். 17 வயது அந்தத் துன்பங்களை நேரில் அனுபவித்து எனக்கு எதிர்காலம் இருண்டு தோன்றியது. என் அப்பா பழையபடி எழுந்து நடமாடமாட்டாரா. வீட்டிலே உடற்பயிற்சியாளர் சொல்லித் தருவது மாதிரி மறுநாள் அவர் வருமுன்னர் ஓயாமல் பயிற்சி தருவோம். ஒத்துழைத்தீர்கள். சினம் கொள்வதில்லை. நடக்கப் பழகிவிட்டீர்கள். இடக்கையால் உங்களால் முடிந்தளவு செய்வீர்கள். இந்தியாவுக்கு படிக்கப்போக அனுமதி தந்தீர்கள். பிரியமனமில்லாது பிரிந்து சென்றேன். அடிக்கடி கடிதம் எழுதுவேன். படிப்பு முடிந்து வந்ததும் ஆரவாரமாக மகிழ்ந்தீர்கள். ஆனால் வேறு துன்பம் தொடர்ந்தது. என்றைக்கு உங்களுக்கு நோய் வந்ததோ அன்று தொடக்கம் இன்றுவரை எங்கள் மத்தியில் ஒரு நிரந்தர சோகம். தங்கையின் பிரிவு உங்கள் சிரிப்பையும்கொண்டு போயிற்று.

கனடாவுக்கு வருவதை அம்மா விரும்பாதபோது "பாவம் தம்பி பாபு" என்று அம்மாவுக்கு புத்தி சொன்னீர்கள். "சின்னப்பொடியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமிபயம். அங்கே விட்டிட்டு வருவோம்" என்றீர்குள். எல்லாம் சரியாக வந்தபின் நீங்கள் மட்டும் இறைவனிடம் சென்றுவிட்டீர்கள். அப்பா நானும் ஒரு தபாலதிபரின் (திரு. திவாகரமூர்த்தி) மகள் மஞ்சுளாவை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்று றோசாந்த் இனியா எனும் குழந்தைகளுக்குத் தந்தையாயுள்ளேன். தவறாது பிதிர்க்கடமைகளை நிறைவேற்றி வருகிறேன். இந்த உருவத்தையே தந்த உங்களை எப்படி மறக்க முடியும் அப்பா. ஒரேயொரு மகனாக இருந்து அந்த நோயுற்றநிலையிலும் எத்தனை தியாகத்தோடு என்னைப்படிக்க அனுப்பினீர்கள். இன்று அதன் உன்னதபலனை அனுபவிக்க நீங்கள் இல்லை. ஆனால் எங்கள் இருதயங்களில் உங்கள் புனிதமான ஆத்மா நிறைந்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. V. Ramalingam
# a Gentleman to the Core

It was with profound shock and grief that I heard the demise of my good friend Rama on 28th December, 1990.

Rama was one who rose above race and religion in all issues. He was a fine son of Lanka, a gentleman to the core.

Honest and efficiency were the hallmarks of his career in the Postal Department. He served as a Postmaster in many parts of the country.

Having held office in several Branch Union and especially as the President of the Jaffna Branch, he did yoeman service to the Union of Post and Telecommunication officers. He served the Union with selfless devotion and sincerity of purpose.

With his demise, the Department lost a hard working and efficient Officer, the union a devoted member and the country a good citizen.

MAY HE ATTAIN ETERNAL BLISS

UPALI S. JAYASEKERA
President
Union of Post and Telecommunication Officers

29-01-1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org